வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu








Email : news@eelanadu.lk | மலர் : 03 | 13.04.2022 புதன்கிழமை | இதழ் : 128 | பக்கங்கள் : 16


# வங்குரோத்து நிலையை அறிவித்தது இலங்கை!

கொழும்பு, ஏப்ரல் 13

**வெளிநாடுகளுக்கு இலங்கை செலுத்த வேண்டிய அனைத்து கடன் தொகைகளையும் தற்காலிமாக செலுத்தாதிருக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநர் பேராசிரியர் நந்தலால் வீரசிங்க நேற்று தெரிவித்தார்.**



"வெளிநாடுகளுக்கு செலுத்தவேண்டிய கடன்களை செலுத்துவது சவாலானது மற்றும் சாத்தியமற்றது என்ற நிலைக்கு வந்துள்ளோம். கடனை மறு சீரமைப்பதும் - திருப்பிச் செலுத்துவதைத் தவிர்ப்பதும்தான் எடுக்கக்கூடிய சிறந்த நடவடிக்கையாகும்.

"நாட்டில் தற்போது வெளிநாட்டுக்கு கையிருப்பு மிகவும் குறைவாகக் காணப்படுவதால், எரிபொருள், மருந்து பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்வதற்காக அவற்றைப் பயன்படுத்த வேண்டும். இந்நிலையில், அடுத்த வாரம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளோம்.

"எமது நாட்டின் வெளிநாட்டு 15

## அத்தியாவசிய மருந்துகள் இல்லை; அவதானத்துடன் செயல்படுங்கள்!

பருத்தித்துறை மருத்துவமனை அறிவுறுத்து

வடமராட்சி, ஏப். 13

அத்தியாவசிய மருந்துகள் இல்லாத இந்த நெருக்கடியான காலகட்டத்தில் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டும் என பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உளநல மருத்துவர் கதிர மலை உமாசுதன் தெரிவித்தார்.

மேலும், கடந்த காலங்களில் கொரோனா நெருக்கடி ஏற்பட்டது போல தற்போது பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அத்தியாவசிய 15

## பேராசிரியர் பாலகுமார் நேற்று காலமானார்!



யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் ச.பாலகுமார் 53 வயதில் நேற்று செவ்வாய்க்கிழமை மாரடைப்பால் காலமானார்.

வடமராட்சியைச் சேர்ந்த பேராசிரியர் பாலகுமார் யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்துறைத் தலைவர் மற்றும் பீடாதி பதி போன்ற பல தலைமைத்துவச் 15

## ராஜபக்ஷக்களுக்கு எதிராக நாம் வீதிக்கு இறங்குவோம்!

சிறீலங்கா சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஏப். 13

"மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக ஏற்கமுடியாது. பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, ராஜ பக்ஷக்கள் ஆட்சி அமைக்க முற்பட்டால் - அந்த ஆட்சிக்கு எதிராக வீதியில் இறங்குவோம்." - என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 15

## 18ஆம் திகதி புதிய அமைச்சரவை?

கொழும்பு, ஏப்.13

புதிய அமைச்சரவை எதிர்வரும் 18 ஆம் திகதி நியமிக்கப்படவுள்ளதென அரச வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவதற்காக இலங்கை பிரதிநிதிகள் குழு, 18 ஆம் திகதி அமெரிக்கா நோக்கி புறப்படவுள்ளனர்.

எனவே, இலங்கையில் நிலையானதொரு அரசுள்ளது என்பதை காண்பிப்பதற்காகவே 18 ஆம் திகதி முழு அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளதென அந்த வட்டாரங்கள் கூறின. 11

## 10 மில்லியன் டொலர்கள் வழங்குகிறது உலக வங்கி!

கொழும்பு, ஏப். 13

அத்தியாவசிய மருந்து பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அடுத்த வாரத்துக்குள் அவசரகால நிதியாக 10 மில்லியன் டொலர்களை வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

மேலும், விவசாயிகளுக்கு இரசாயன உரம் மற்றும் நெல் விதைகளை வழங்குவதற்காக 500 மில்லியன் டொலர்கள் உதவியை கோரியுள்ளதாக நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

வறுமையில் வாடும் மக்களுக்கு மாதாந்த 15

## இலங்கையின் நிலவரம் பைடனுடன் மோடி பேச்சு

புதுடில்லி, ஏப். 13

பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக தற்போது இலங்கையின் நிலவரம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பைடனுடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் இணையவழி நேரலை தொடர்பாடல் தொழில்நுட்பம் மூலம் சந்தித்துப் பேசியுள்ளார்.

இதன்போது, பாகிஸ்தான் மற்றும் இலங்கையின் நிலைமைகள் குறித்து 15

## தமிழகத்துக்கு தப்பி செல்வோரை தடுப்பதில் கடற்படையினர் தீவிரம்

மன்னார், ஏப். 13

இலங்கையில் இருந்து இந்தியாவிற்குத் தப்பிச் செல்வோரை தடுப்பதற்காக மன்னாரில் கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை மற்றும் வருமானம் இன்மை காரணமாக பலரும் தமிழகத்துக்கு தப்பியோடி வருகின்றனர். இதன் காரணமாக அரசிற்கு இராஜதந்திர ரீதியில் அழுத்தங்கள் அதிகமாக காணப்படும் என்பதனால் தமிழகத்திற்கு தப்பியோடுவோரை 15

## 237 மருந்துகளுக்கு தட்டுப்பாட்டு நிலை!

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஏப். 13

அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தற்போது 237 மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் செயலாளர் மருத்துவர் செனல் பெர்னாண்டோ இந்தக் கருத்தை வெளியிட்டார்.

மருந்துப் பற்றாக்குறையால் அரச, தனியார் மருத்துவ மனைகள் பாதிக்கப் 15

## புலி புலனாய்வாளர்கள் மூவரின் சொத்து இந்தியாவில் முடக்கம்!

புதுடில்லி, ஏப். 13

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவு என சந்தேகிக்கப்படும் மூவரின் சொத்துகளை இந்திய அரசாங்கம் முடக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபேஷன், ரமேஷ் மற்றும் சௌந்தர்ராஜன் ஆகிய 3 பேருக்குச் சொந்தமான 6 காணிகள், 12 வாகனங்கள் உள்ளிட்ட 3.59 கோடி இந்திய ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் இவ்வாறு முடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய புலனாய்வுப் பிரிவால் குறித்த மூவரும் கடந்த ஆண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டுவதாகக் கூறி போதைப் பொருள் கடத்தல் மற்றும் ஆயுதக் கடத்தல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## எரிபொருள் முறைகேடா? அறிவியுங்கள்

கொழும்பு, ஏப். 13

எரிபொருள் மற்றும் எரிவாயு வழங்கல் அல்லது விநியோகத்தின் போது, ஏற்படக்கூடிய முறைகேடுகள் தொடர்பில் அறிவிக்க 071 169 1691 என்ற விசேட கைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக 15

## அரச மருத்துவமனைகளில் மருந்து போதியளவு உண்டு

சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 13

அரச மருத்துவமனைகளில் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் போதியளவில் கையிருப்பில் காணப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மருந்து மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களுக்கு, அரச மருத்துவமனைகளில் கடுமையான பற்றாக்குறை நிலவுவதாக சமூக ஊடகங்கள் மூலமாக உறுதிப்படுத்தப்படாத சில தகவல்கள் பரிமாறப்படுகின்றன.

இந்நிலையில், அரச மருத்துவ மனைகளில் 15

## இப்படியும் நடக்கிறது...!

இன்றைக்கு இந்த ஊர்க்குருவியர் எதுவும் எழுதப் போவதில்லை.

சிங்களத்தில் வந்த ஒரு முகநூல் பதிவு ஒன்றை நண்பர் ஒருவர் தமிழில் மொழிபெயர்த்து அனுப்பியிருந்தார்.

அதனையே இங்கே முழுமையாக தர விருப்பமாக இருக்கின்றது. முதலில் படித்துப்பாருங்கள்.

'நாங்கள் விடும் தவறுகளை நாங்களே இனம் கண்டு திருந்திக் கொண்டால் நாடும் தானாக திருந்தும் என நான் நம்புகின்றேன்.

'கோடா கோ ஹோம்' என கோஷம் எழுப்பும் அதிகமானோர் நினைத்துக்கொண்டிருப்பது, நாட்டின் இந்த நிலைக்குக் காரணம் கோட்டாதான் என்று.

என்றாலும், அவர்களோடு சேர்த்து இதற்கு வகை கூறவேண்டிய இன்னும் சில தரத்தவரும் இருக்கின்றனர்.

அவர்கள்.....?

இவ்வளவு காலமும் தமது வயிற்றுப் பசியை மாத்திரம் கருத்திற்கொண்டு, தேர்தல் காலங்களில் கிடைக்கும் சாராய போத்தலுக்கும் உணவுப் பொதிக்கும் ஏமார்ந்து, அரசியல்வாதிக்கு வக்காலத்து வாங்கிய வாக்காளர்கள்.

பொதுமக்களது வரிப்பணத்தால் சும்மா சம்பளம் எடுத்துக் கொண்டு, அரட்டை அடித்துக் கொண்டும் பொறுப்பு உணர்வின்றி மக்களை அலைக்கழிக்கும் அரச ஊழியர்கள்.

ப்ராடோ, டிபெண்டர்களுக்கு ஒரு சட்டமும், ஆட்டோ டிரைவர்களுக்கு ஒரு சட்டத்தையும் அமல்படுத்தும் பொலிசார்.

அரச வாகனத்தை, அதன் சாரதியை, தனது மனைவிக்கு சொப்பிங் செல்ல பயன்படுத்தும் ஆயுதப் படை வீரர்கள்.

பரீட்சை மண்டபத்தில் மாணவர்களுக்கு வழங்க தரும் கடதாசிகளை அவர்களுக்கு கொடுக்காமல், கட்டுக்கட்டாக தனது வீட்டுக்கு கடத்தும் பரீட்சை மண்டப பொறுப்பாளர்கள்.

தொழில் பதவிகளைப் பெற தனது திறமையை, பட்டத்தை ஒரு புறம் தள்ளிவிட்டு, கேவலம்கெட்ட அரசியல்வாதிகள் முன் முழந்தாளிடும இளைஞர்கள்.

சாதாரண பொதுமக்களின் வரிப்பணத்தை சுரண்டி விமானத்தில் முதலாம் வகுப்பில் செல்லும் அரசியல்வாதியின் முன் நெளிந்து குழைந்தும், மத்திய கிழக்கில் வியர்வை சிந்தி நாட்டுக்கு பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும், அதே விமானத்தில் சாதாரண வகுப்பில் பயணிக்கும் உழைப்பாளிளோடு எரிந்து விழும் விமான பணியாளர்கள். தமக்கு போதிய வருமானம் இருந்தும் களவில் சமூர்த்தி எடுக்கவும், கிராமசேவகரை பயன்படுத்தி கள்ள சான்றிதழ் பெற்று தன் பிள்ளைக்கு ஸ்கொலஷிப், மஹாபொல எடுக்கவும் முனையும் பெற்றோர்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் சூரியசக்தியை பயன்படுத்தினால் மின்சார பிரச்னை பெருமளவு தீரும் என அறிந்திருந்தும், தமது வயிற்றை வளர்ப்பதற்காக மட்டும் அத்திட்டத்தை மண்ணாக்கும் மின்சார சபை எஞ்சினியர்கள்.

மிளகாய் தூளில் செங்கல்லையும் மஞ்சள் தூளில் மாவையும் மிளகு விதையோடு பாப்பாசி விதையையும் கலந்தும், பழங்களுக்கு காபைட் அடித்து, பலாக்காயை ஹாப்பிக் கொண்டு குளிப்பாட்டி, அப்பாவி விவசாயிகளிடம் இரண்டு துட்டுக்கு எடுக்கும் அரிசி, மரக்கறி, பழங்களை நெருப்பு விலைக்கு விற்று பகற்கொள்ளை அடிக்கும் கள்ள நிறுவை செய்யும் வியாபாரிகள்.

சீருடையில் நெஞ்சுக்கு மேல் இடது புறத்தில் அரச இலச்சினை பொருத்திய நிலையிலும், தேசிய வனாந்தரங்களில் மரங்களை வெட்டி, மொரட்டுவைக்கு களவில் அனுப்புகின்றவன பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள்.

குறைந்த விலையில் உள்ள மருந்தை நோயாளிக்கு சிபாரிசு செய்யாமல், மருந்து கம்பெனிகளின் கமிஷனுக்காக அதிக விலையுள்ள மருந்தை சிபாரிசு செய்யும் தனியார் மருத்துவமனைகளில் தேவையற்ற பரிசோதனைகளுக்காக அனாவசிய செலவை ஏற்படுத்தும் வைத்தியர்கள்.

குப்பை கூளங்களை ஏற்றிச்செல்ல வரும்போது கையில் கொஞ்சம் துட்டை திணிக்காவிட்டால் அடுத்த முறை ஏற்றாமல் போட்டுவிட்டுச் செல்லும் நகரசபை ஊழியர்கள்.

வீடுகளில் முடங்கிக் கிடந்து அரசியல்வாதிகளை தூற்றிக் கொண்டு இருக்காமல், குறைந்தது ஒரு மிளகாய் கன்றையாவது நடத் திராணியற்ற முதியவர்கள், பெண்கள், பிள்ளைகள்.

இவர்கள் மட்டுமா.....?

அறையில் இருந்து வெளியேறும்போது மின் சுவிட்சை அணைக்காத, ஒழுங்காக தண்ணீர் பைப்பை மூடாத, கையிலிருக்கும் டொபி பேப்பரை நிலத்தில் கண்டபடி போடுகின்ற, உட்காரும் கதிரைக்குக் கீழே சுவிங்கத்தை ஒட்டுகின்ற, கண்ட கண்ட இடங்களில் எச்சில் உமிழுகின்ற, தனது குழந்தையின் பம்பஸ்ஐ நீர் நிலைகளிலும் பாதைகளிலும் எறிகின்ற, மனிதருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் வீதி சட்டங்களை மீறுகின்ற, பஸ் - புகைவண்டி சன நெரிசலில் பெண்களை தொல்லைபடுத்துகின்ற, அடுத்த பிள்ளையின் இடத்தை பறித்து தனது பிள்ளையை வரிசையில் முன் நிறுத்துகின்ற, மின்சார மீட்டரில் வயரை மாற்றி, பாவித்த மின்சாரத்தை விட குறைந்த கட்டணத்தை களவில் செலுத்துகின்ற, வீட்டின் அழுக்கு தண்ணீரை பாதைக்குத் திருப்பி விடுகின்ற, பொலித்தீன் பிளாஸ்டிக் என்பவற்றை தீ வைத்து எரித்து சூழலை மாசு ஆக்குகின்ற, இன்னும் இவ்வாறான அசிங்கமான செயல்களை ஒவ்வொரு நாளும் செய்கின்ற நீங்களும் கோட்டாவோடு சேர்ந்து 'கோ ஹோம்'.

நீங்கள் சின்ன திருடர்கள், அவர்கள் பெரும் கொள்ளைக்காரர்கள் என நினைக்கவேண்டாம். மொத்தத்தில் நீங்கள் எல்லோரும் திருடர்களே.....'

இந்தப் பதிவை படித்தபோது ஏதோ ஒருவகையில் இந்த ஊர்க்குருவியையும் அவர் திருடர் என்பதாக எதிரொலிக்கின்றது. அனேகமாக இதைப்படிக்கின்ற ஒவ்வொருவரும் அதனையே உணர்வார்கள் என்று நம்புகின்றேன்.

திருந்த முயல்வோம் என்ற நம்பிக்கையுடன்...!

**- ஊர்க்குருவி**

## அதிகளவான பணத்தை அச்சிட்டது மத்திய வங்கி

*கொழும்பு ஏப்.13*

இலங்கை மத்திய வங்கி நேற்று முன்தினம் திங்கட்கிழமை 33.31 பில்லியன் ரூபாய் பணத்தை அச்சிட்டுள்ளது.

இம்மாதத்தில் மட்டும் மொத்தம் 152.21 பில்லியன் ரூபாய் பணத்தை மத்திய வங்கி அச்சிட்டுள்ளது. இதேவேளை இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் சுமார் 465.89 பில்லியன் ரூபாய் பணம் அச்சிடப்பட்டுள்ளது. (அ)

## புதுவருடப் பிறப்பும் மருத்துநீர் வழங்கலும்!

*யாழ்ப்பாணம், ஏப். 13*

யாழ்ப்பாணம் - வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சுபகிருது வருடப்பிறப்பு விஞ்ஞாபனம் நாளை 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெறும்.

இதற்கான மருத்துநீர் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் மாலை 6 மணி வரை வழங்கப்படும் என ஆலய தர்மபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

## விபத்தில் சிக்கி படுகாயமுற்ற நபர் உயிரிழப்பு!

*யாழ்ப்பாணம், ஏப். 13*

விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் நுணாவில் கைதடியைச் சேர்ந்த சுப்பர் சுதாகர் (வயது- 52) என்பவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதடி பாலத்தடியிலிருந்து கைதடிப் பிள்ளையார் கோவிலை நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்த அவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

இதில் படுகாயம் அடைந்த அவர் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

இவ் விபத்துத் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

### எரிபொருள் பதுக்கிவைப்பு;

## எரிபொருள் நிலையத்தின் அனுமதிப் பத்திரம் இரத்து

*கொழும்பு, ஏப். 13*

ஜா-எல பகுதியில் தொடர்ந்து 5 நாட்களுக்கு மேலாக 4 பெற்றோல் மற்றும் டீசல் கொள்கலன்களை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் ஒருவரின் அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

ஜா-எல, பமுனுகம எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரின் அனுமதிப்பத்திரமே இவ்வாறு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## நாவல் வெளியீடும் அஞ்சலி நிகழ்வும்!

*லண்டன், ஏப். 13*

சாரல்நாடனின் "வானம் சிவந்த நாட்கள்" நாவல் வெளியீடும், மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அஞ்சலி உரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை லண்டனில் நடைபெறவிருக்கின்றன.

மீனாள் நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் முதல் அமர்வில் சாரல்நாடனின் நாவல் வெளியீடு நடைபெறும். இதில் செல்வி சி. பாரதி, கோகுலரூபன், நாகலிங்கம் சிறிசபேசன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

நவஜோதி யோகரட்ணம் தலைமையில் நடைபெறும் இரண்டாவது அமர்வில் பேராசிரியர் செ. வே. காசிநாதனின் "விற்கன்ஸ்ரைன்: மொழி, அர்த்தம், மனம்" என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வில் தோழர் வேலு, உமையாள், ராகவன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

மறைந்த பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்களுக்கு அஞ்சலி உரையை விமர்சகர் மு.நித்தியானந்தன் ஆற்றுகின்றார். (ஐ)

## 20ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நீக்கப்படும்!

### வாசுதேவ நாணயக்கார உறுதி

*கொழும்பு, ஏப். 13*

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தோல்வி என்பதை முழுநாட்டு மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். தற்போதையநிலையில் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியாத நிலைமை காணப்படுவதால் ஜனாதிபதி தலைமையில் புதிய பிரதமரின் கீழ் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க முயற்சிக்கிறோம். முழுநாட்டுக்கும் வினையாக அமைந்துள்ள 20ஆவது திருத்தம் நிச்சயம் முழுமையாக இல்லாதொழிக்கப்படும் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

என்.எம்.பெரேரா மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தே பொதுமக்கள் அரசாங்கத்துக்கு எதிராக தொடர் போராட்டத்தில் ஈடுப்படுகிறார்கள். பெரும்பான்மை பலம் கிடைத்துவிட்டது. ஆகவே தனது எண்ணம் போல் செயல்படலாம் என ஒரு தரப்பினர் தான்தோன்றித்தனமாக செயல்பட்டதன் விளைவை அரசாங்கம் தற்போது அனுபவிக்கிறது. முழுநாட்டுக்கும் வினையாக அமைந்துள்ள அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை முழுமையாக நீக்கி - 21ஆவது திருத்தத்தை உருவாக்குவது இடைக்கால அரசாங்கத்தின் பிரதான இலக்காக உள்ளது - என்றார். (ஐ)

## புதையல் தேடிய யாழ். பூசாரி உட்பட ஆறு பேர் மானாவெரியவில் கைது

*கொழும்பு, ஏப்.13*

ஆராச்சிக்கட்டுவ-மானாவெரிய பிரதேசத்தில் உள்ள காணியில் புதையல் தேடிக் கொண்டிருந்த யாழ். பூசாரி, பெரமுன நகரசபை உறுப்பினர் உள்ளிட்ட 6 பேர் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் சிலாபம் நகரசபை உறுப்பினர், அவரது இரண்டு மகன்கள் மற்றும் யாழ்ப்பாணம், கண்டியைச் சேர்ந்த மூவரே சிலாபம் குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களுள் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பூசாரியும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட கருவிகள், பலி கொடுக்கப்பட்ட இரண்டு கோழிகள் உள்ளிட்ட மேலும் சில பொருட்கள் கைப்பற்றப் பட்டன.

சந்தேகநபர்கள் ஆராச்சிக்கட்டுவ, மானாவெரிய பிரதேசத்தில் புதையல் தேடி குழி தோண்டிக் கொண்டிருந்த போது, கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸார் சுற்றிவளைத்து அவர்களை கைது செய்தனர்.

இதனையடுத்து கைதான சந்தேக நபர்களை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் சிலாபம் நீதவான் ஏப்ரல் 20 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu
13.04.2022 புதன்கிழமை
பிலவ வருடம், பங்குனி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## காலிமுகத்திடல் போராட்டம்?

ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரி காலிமுகத்திடலில் சிங்கள மக்கள் ஒன்றுதிரண்டிருக்கின்றனர். இன்னும் சில மாதங்களுக்குள் நிலைமை சரி செய்யப்படாவிட்டால், நாட்டை மீட்க முடியாமல் போய்விடும் என்னும் நிலையில்தான், காலிமுகத்திடலில் மக்கள் ஒன்று திரண்டிருக்கின்றனர். இந்தப் போராட்டம் ஒரு கட்டத்துடன் நீர்த்துப் போய்விடுமா - அல்லது, லிபியாவில், துனிசியாவில் இடம்பெற்றது போன்று பெரும் எழுச்சியடையுமா - என்பது தொடர்பில் இப்போதைக்கு தீர்க் கமான முடிவுகளுக்கு வர முடியாது.

ஆனால், மக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தொடர்ச்சியாக திரண்டிருக்க வேண்டுமாயின், அதற்கு பலமானதோர் ஆதரவு தேவை. அரபு வசந்தமென்று அழைக்கப்பட்ட லிபியா, எஜிப், யேமன், சிரியா ஆகிய நாடுகளின் மக்கள் எழுச்சிக்கு பின்னால், சர்வதேச சக்திகள் இருந்தது இரகசியமான ஒன்றல்ல. அதற் கான தேவைகள் அங்கிருந்தன. ஆனால், இலங்கை நிலைமைகள் முற்றிலும் வேறானது. இலங்கையில் பாரியதோர் எழுச்சி இடம்பெறுமாக இருந்தால், அது இந்தியாவின் கவனத் தைப் பெறும்.

தற்போதைய மக்கள் எதிர்ப்பானது, அடிப்படையில், ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிரான ஓர் அலையாக திரட்சிபெற்றிருக்கின்றது. இந்த எதிர்ப்பு பெரும்பான்மையான சிங்கள மக்களை பற்றிக் கொள்ளுமாக இருந்தால், இது ஒரு பெரும் சிங்கள எழுச்சியாக மாறக்கூடும். - அதற்கான வாய்ப்புள்ளது. ஆனால், அப்படி நடக்காமல் விடுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. மக்கள் எழுச்சியைத் திட்டவட்டமாக எதிர்வு கூறமுடியாது. ஒரு சிறிய அசைவின் மூலமும் பெரும் எழுச்சிகள் உருவாகலாம். அதேவேளை ராஜபக்ஷக்கள் தந்திரமான அரசியல் நகர்வு களால் எழுச்சியை கட்டுப்படுத்தி, அதன் வீரியத்தை குறைக் கலாம். அதற்கும் வாய்ப்புக்கள் இல்லையென்று கூறவிடமுடியாது.

ஆனால், எல்லாக் காலத்திலும் ஒரே மாதிரியான உத்திகளால் மக்களை எதிர்கொள்ள முடியாது. ராஜபக்ஷக்களை பொறுத்த வரையில், அதிருப்தியில் வெளியேறியிருக்கும் தரப்புக்களை தந்திரமாக அரவணைத்து, அரசாங்கத்தைத் தக்கவைத்துக் கொள்வதன் ஊடாக, பிரச்னைகளை எதிர்கொள்ள முயற்சிப்பதா கவே தெரிகின்றது. அமைச்சுப் பதவிகளை வழங்குவதன் ஊடாக, எதிரணியை பலவீனப்படுத்தலாமென்று அவர்கள் எண்ணுவதாகவே தெரிகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின்போது, இவ்வாறான உத்தி களிலேயே ராஜபக்ஷக்கள் கவனம் செலுத்தியிருந்தனர். அன்றைய சூழலில் அவர்களின் தந்திரங்கள் அவர்களுக்குப் பெரியளவில் வெற்றியை கொடுத்திருந்தது. ஆனால், எல்லாக் காலத்திலும் இவ்வாறான தந்திரங்கள் கைகொடுக்குமென்று எதிர்பார்க்க முடியாது.

மக்கள் பெரியளவில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக திரட்சி பெற் றால், அதன் பின்னர் ராஜபக்ஷக்களுடன் நிற்பதற்கு ஏனை யவர்கள் அச்சப்படுவர். ராஜபக்ஷக்கள் முன்னைய செல்வாக்கில் இப்போதில்லை என்பது வெள்ளிடைமலை. பொருளாதார நெருக் கடிகளைக் கணிசமாக தீர்ப்பதன் மூலம் இந்த அதிருப்திகளை தணிக்க முடியுமென்று அரசாங்கம் கருதலாம். ஆனால், மிகவும் குறுகிய காலத்தில் பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகரமாகக் கையாள முடியுமா என்பது ஒரு பெரிய கேள்வியாகும். இந்த இடைப்பட்ட காலத்தில் காலிமுகத்திடல் போராட்டம் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்துவிட்டால் அதன் பின்னர் நிலைமைகள் ராஜபக்ஷக்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வாய்ப்பில்லை. நிலைமைகள் தலைகீழாகிவிடலாம்.

# புதிய நகர்வுக்கு தயாராகும் சந்திரிகா!

**அலசுவது இராஜதந்திரி**



இலங்கையை தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்தும் மீட்கும் விதத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க புதிய அரசியல் வியூக மொன்றை வகுக்க முன்வந்துள்ளார்.

இதுகுறித்து அவர் சில அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடியுள்ளார். சந்திரிகாவின் முயற்சி எவ்வளவு தூரம் வெற்றிபெறும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். இருந்தபோதிலும் தற் போது பலமான ஓர் எதிர்கட்சியோ அல்லது எதிர்தரப்பு தலைமையோ இல்லாத தருணத் தில் சந்திரிகா போன்ற அனுபவமிக்க அரசியல் தலைவர் நாட்டின் அவல நிலையை போக்கு வதற்கு முன்வருவது வரவேற்புக்குரியதே.

இலங்கையின் இன்றைய ஆட்சியை எடுத்துக்கொள்ளும் பட்சத்தில் ஓர் உறுதி யான தலைமைத்துவம் இல்லாதிருப்பதையே அவதானிக்க முடிகின்றது. இதன் வெளிப்பாடாகவே ஒரு பெரும் மக்கள் புரட்சியே வெடிக்குமளவுக்கு தற்போது நாட்டில் அரசியல் சூழ்நிலைகள் மாற்றங் கண்டு வருகின்றன.

எதிர்கட்சி தலைவர் சஜித் அரசியலில் இன்றுவரை ஓர் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துபவராகக் காணப்படவில்லை. அதேசமயம் ஐக்கிய தேசிய கட்சி தலைவரும் முன்னாள் பிரதமர் மற்றும் எதிர்கட்சி தலைவராகவுமிருந்த ரணில் விக்கிரமசிங்க ஒரு நம்பத்தகுந்த அரசியல் தலைவராகக் காணப்படவில்லை. இத்தகைய பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க உறுதியான ஓர் அரசியல் நகர்வை இன்றைய ஆட்சியாளரை ஓரங்கட் டும் விதத்தில் மேற்கொள்வாரே யானால் அதற்கு அரசியல் கட்சிகளின் ஆதரவும், பொதுமக்க ளின் பேராதரவும் கிடைக்குமென்றே கருத முடியும்.

ஏனெனில், "பூனைக்கு யார் மணிகட்டுவது?" என்ற நிலையிலேயே மக்கள் இருக்கின்றனர்.

இத்தகைய பின்னணியில் முன்னாள் ஜனா திபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவின் புதிய முயற்சிக்கு அரசியல் கட்சி கள் ஆதரவு வழங்கமுடியுமென்றே அவதா னிக்க முடிகின்றது.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு நேற்று முன்தினம் தொலைக்காட்சி வாயிலாக நிகழ்த்திய உரை அவநம்பிக்கையானதாகவும் உண்மை நிலவரங்களை மறைப்பதாகவும் இருந்த தென்றே அறியமுடிந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டை மீண்டும் ஓர் இருண்ட யுகத்துக்கு கொண்டுசெல்லவேண்டாமென்று நாட்டு மக்களிடம் கேட்டிருந்தார். அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டமையை நோக்கும்போது நாட்டு நிலவரத்தை சரிவர புரிந்து கொண்டு தான் அவர் அவ்வாறு பேசுகின்றாரோ என்று எண்ணத்தோன்றியது.

ஏனெனில், முழுநாடுமே பொருளாதார நெருக்கடியால் மின்சார விநியோகம் பாதிக் கப்பட்டு இருளில் மூழ்கியுள்ளது. இதுதவிர, மக்கள் அத்தியாவசிய பொருட்களைப் பெறுவதற்காக இரவு பகலாக நீண்ட வரிசை யில் காத்திருக்கின்றனர். எனவே, முழு நாட் டையுமே ஓர் இருளடைந்த சூழ்நிலைக்குள் தள்ளிவிட்டு தற்போது மீண்டும் ஓர் இருண்ட யுகத்துக்கு கொண்டு செல்ல வேண்டாமென நாட்டு மக்களிடம் கேட்பது வேடிக்கை யானதாகவே இருக்கின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட் டிருந்த இருண்ட யுகமென்பது முப்பது வருட கால வடக்கு - கிழக்கு போர்ச் சூழ்நிலை யையே சுட்டிக்காட்டுவதாக இருந்தது.


ஆனால், அன்றைய யுத்த நிலவரம் மோசமடைந்திருந்த போதிலும் கூட நாட்டு மக்கள் இன்றிருப்பது போல அத்தியாவசிய பொருட்களுக்காக அங்கலாய்த்து திரிய வில்லை. யுத்த செலவீனம்கூட மிதமிஞ் சியிருந்தது. அச்சமயங்களில் எரிபொருள் போன்றவற்றின் விலையேற்றங்கள் காணப்பட்டன. ஆனால், மக்கள் வீதிகளில் இறங்கி வரிசைகளில் நின்றோ அல்லது மயங்கி வீழ்ந்து மரணிக்கவோ இல்லை. ஏனெனில், நாட்டு நிலவரத்தை கையாளும் விதத்தில் பொருளாதாரம் மற்றும் திட்ட மிடல் துறைகளில் கைதேர்ந்தவர்கள் காணப் பட்டிருந்தனர்.

எனவே, தற்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசியல் கட்சிகள் சிலவற்றை கூட்டிணைத்து நாட்டு நிலவரத்தை தகுந்த முறையில் கையா ளுவதற்கான ஒரு முயற்சியை முன்னெடுத் துள்ளார்.

சந்திரிகா களமிறங்கும்பட்சத்தில் உலக நாடுகள் பல அவருக்கு உதவ முன்வரலாம். ஏனெனில், அவர் சர்வதேச அரங்கில் மதிக்கப்படுகின்ற ஓர் அரசியல் பிரமுகராக இருக்கின்றார். அத்துடன், இந்தியாவுடனான சந்திரிகாவின் உறவு பலமானது.

இந்நிலையில் சந்திரிகா எடுக்க முனை கின்ற புதிய நகர்வை அவர் மீளவும் பதவிக்குவர முயற்சிக்கிறார் என்ற அர்த்தப் படலாகாது. இன்றைய தருணத்தில் அவர் ஒரு முன்னாள் தேசத் தலைவர் என்ற வகையில் நாட்டை இன்றைய நெருக்கடி யிலிருந்து காப்பாற்ற முனைகின்றார் என்று கருதுவதே சரியானதாக இருக்க முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஏப்ரல் - 13 புதன்கிழமை
பிலவ வருடம் - பங்குனி 30
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவா தசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
இழுபறியாக இருந்து வந்த செயல்களை இன்று நிறைவேற்றுவீர்கள். விருந்துக்கு செல்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வழக்கு சாதகமாகும். வீடு, வாகனம் விற்பனை லாபம் தரும்.

**இடபம்**
வாழ்வில் முன்னேற்றமான போக்கு காணப்படும். யார் மீதும் நீங்களாக சென்று வழக்கு தொடுக்க வேண்டாம். உங்களுக்கு பயத்தை ஏற்படுத்திய செய்தி காணாமல் போகும்.

**மிதுனம்**
சகபணியாளர்களிடம் அன்பாக பேசி பணிகளை முடிப்பீர்கள். நல்ல வாய்ப்புகள் தள்ளிப் போனாலும் உற்சாகத்திற்கு குறைவிருக்காது. உறவினருடன் இருந்த மனஸ்தாபம் விலகி ஒற்றுமை கூடும்.

**கடகம்**
எதிரிகளால் இருந்த தொல்லைகள் நீங்கி நிம்மதி உண்டாகும். ஆன்மிகத்தில் ஆர்வம் அதிகரிக்கும். நிம்மதி கூடும் நாள். நல்லவர் யார், கெட்டவர் யார் என்பதை இன்று அறிந்து கொள்வீர்கள்.

**சிம்மம்**
குழந்தைகளால் மனஅழுத்தம் வந்தாலும் அவர்களாலேயே அது சரியாகி விடும். அலங்காரப் பொருள், ஆடைகள் வாங்குவீர்கள். தொழில் சிறக் கும். வரவேண்டிய நல்ல செய்திகள் தாமதமாகவே வரும்.

**கன்னி**
நெருங்கிய உறவினர் ஒருவர் பற்றிய கவலை தீரும். மனதில் இருந்த கவலைகள் தீரும். சேமிப்பில் ஆர்வம் கூடும். நவீன உபகரணங்களை வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

**துலாம்**
வீட்டிலும், வெளியிடத்திலும் பிறரை அனுசரித்து செல்வது நல்லது. எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைப்பதால் மனஅமைதி ஏற்படும். இன்றைய பயணத்தின் மூலம் நன்மை காண்பீர்கள்.

**விருட்சிகம்**
உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது பற்றி கவனம் கூடும். அலுவலக பேச்சு வார்த்தை ஒன்று சிறப்பாக முடியும். சிரமம் ஏற்படாமல் இருக்க முன் யோசனையோடு செயல்படுவீர்கள்.

**தனுசு**
உங்களின் திறமை வெளிப்படும். திட்டமிட்ட விஷயம் சிறப்பாக நடைபெறும். சங்கடங்கள் அனைத்தும் அகலும். நிம்மதி கூடும் நாள். செயலில் கவனம் தேவை. தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
உங்களது செல்வாக்கை பாதுகாக்க சில முயற்சிகளை செய்வீர்கள். முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள். பணியில் வளர்ச்சி காண்பீர்கள். நிலுவைப் பணிகளை செய்து முடித்து நிம்மதி காண்பீர்கள்.

**கும்பம்**
தொழில் பற்றிய திட்டம் வெற்றி பெறும். உங்களின் செல்வாக்கு உயரும். பிறரது வாக்குறுதியை நம்ப வேண்டாம். பொறுமை தேவை. அக்கம்பக்கத்தினருடன் அனுசரித்து செல்வது நல்லது.

**மீனம்**
எந்தவொரு செயலையும் யோசித்த பிறகே செயல்படுத்துவீர்கள். சுபச்செலவுகளால் உங்களின் கையிருப்பு கரையலாம். பேச்சிலும், செயலிலும் ஆற்றல் மிகும் நாள். மகிழ்ச்சி கூடும்.

# மக்கள் பிரச்னையில் அரசியலை புகுத்தி கட்சியை பலமாக்க முடியாது!

## முதல்வர் ஸ்ராலின்



சென்னை, ஏப். 13

மக்கள் பிரச்னையில் தேவையில்லாமல் அரசியலை புகுத்தி தங்கள் கட்சியை பலப்படுத்த பா. ஜ. க. நினைத்தால் அது நடக்கவே நடக்காது என்று சட்டசபையில் முதலமைச்சர் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

வானதி சீனிவாசனுக்கு பதிலளிக்கும் முகமாக பேசிய ஸ்ராலின், “பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த உறுப்பினருக்கு ஒரு அன்பான வேண்டுகோள். அது என்னவென்று கேட்டால், ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய பிரச்னைகளில் நீங்கள் கொஞ்சம் அதிகம் கவனம் செலுத்துங்கள். இதுதான் என்னுடைய வேண்டுகோள். சாமானிய மக்கள் பாதிக்கிற வகையில், இன்றைக்கு பெற்றோல் விலை, டீசல் விலை, அதேபோன்று, எரிவாயு விலை, இவையெல்லாம் உயர்ந்து கொண்டே போகிறது. அதைக் கட்டுப்படுத்துகிற முயற்சியிலே நீங்கள் ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டிய நிதியைப் பற்றி விளக்கமாக, விரிவாக சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சர்களிடத்திலே, குறிப்பாக, இந்தியப் பிரதமரிடத்திலே நான் வலியுறுத்திவிட்டு வந்திருக்கிறேன். எனவே, அதற்கு நீங்கள் ஆதரவாக இருந்து, அதைப் பெறுவதற்கான முயற்சியிலே நீங்கள் ஈடுபட வேண்டும். நம்முடைய மாநில மக்களுக்கு எது சாதகம் என்பதைப் புரிந்து கொண்டு நீங்கள் நடக்க வேண்டும். எனவே, தேவையில்லாமல், இதிலே அரசியலைப் புகுத்தி, அதன்மூலமாக நீங்கள், உங்களுடைய கட்சியைப் பலப்படுத்த வேண்டும், வளப்படுத்த வேண்டுமென்று நினைத்தீர்களேயானால், அது நடக்கவே நடக்காது என்பதை நான் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார். (ஐ)

# தமிழே இணைப்பு மொழி ஏ. ஆர். ரஹ்மான் பதிலடி!



சென்னை, ஏப். 13

மத்திய அமைச்சர் அமித் ஷா தெரிவித்த ஹிந்தி தொடர்பான கருத்துக்கு பதில் அளித்த இசையமைப்பாளர் ஏ. ஆர். ரஹ்மான், “தமிழ் தான் இணைப்பு மொழி” எனக் கூறியுள்ளார்.

தமிழகத்தில் அவ்வப்போது ஹிந்தி தொடர்பான சர்ச்சைகள் ஓடிக் கொண்டே இருக்கின்றன. சில தினங்களுக்கு முன் மத்திய அமைச்சர் அமித் ஷா, “ஆங்கிலத்துக்கு மாற்றாக இந்தியாவின் இணைப்பு மொழியாக ஹிந்தி இருக்க வேண்டும” எனக் கூறினார். இவரின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்து பலரும் கருத்து பதிவிட்டனர். ஒரு மொழியை கற்க நினைப்பது அவரவர் இஷ்டம். இதை ஏன் தடுக்க வேண்டும் எனப் பலரும் கருத்து பதிவிட்டனர். அதே சமயம் இதற்கு எதிர்ப்புகளும் கிளம்பின. ஒரு மொழியை கற்பது தவறல்ல, அதை திணிப்பதைத்தான் ஏற்க மாட்டோம் எனப் பலரும் எதிர் கருத்து தெரிவித்தனர்.

இசையமைப்பாளர் ஏ. ஆர். ரஹ்மான் நேற்றுமுன்தினம், “இன்பத் தமிழ் எங்கள் உரிமை செம் பயிருக்கு வேர்” என்ற பாரதி தாசனின் பாடலை குறிப்பிட்டு, தமிழ்தாய் தமிழின் அடையாளமான “ழ” கரத்துடன் இருப்பது போன்ற ஒரு புகைப்படத்தைப் பதிவிட்டு, தமிழணங்கு என பதிவிட்டார். இது பலரின் கவனத்தையும் ஈர்த்தது. பலரும் இதை பிரபலமாக்கினர்.

இந்நிலையில், சென்னையில் மாநாடு ஒன்றில் பங்கேற்ற ஏ. ஆர். ரஹ்மான், “தமிழ் படங்களை எங்கு பார்த்தாலும் நாம் பெருமைப்பட வேண்டும். ஒரே இந்தியாதான். வட இந்தியா, தென்னிந்தியா என்றில்லை” என்றார்.

நிகழ்ச்சியை முடித்து திரும்பிய ரஹ்மானிடம் இந்தியாவின் இணைப்பு மொழியாக ஹிந்தியை ஏற்க வேண்டும் என மத் திய அமைச்சர் அமித் ஷா கூறியது பற்றி செய்தியா ளர் கேள்வி எழுப்பினர். அதற்கு “தமிழ்தான் இணைப்பு மொழி ” என்றார் ரஹ்மான். இவரின் இந்த கருத்து சமூகவலைத்தளங்களில் அதிகம் பகிரப்படுகின்றது. (ஐ)

# படிக்கல்லாக பயன்படும் சோழர் கால கல்வெட்டு!



காஞ்சிபுரம், ஏப். 13

குலோத்துங்க சோழன் காலத்து கல்வெட்டு ஒன்று ஆலய படிக்கட்டாகப் பயன்படுகின்றது. இதைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் அருகே உள்ள மலையான்குளம் கிராமத்தில் 12 மற்றும் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டன.

இந்த கல்வெட்டு முதலாம் குலோத்துங்க சோழர்கள் காலத்தைச் சார்ந்ததாகும். ஹகலிங்கத்துப் பரணி“ என்ற புகழ்பெற்ற நூல் இவர் காலத்தில் இயற்றப்பட்டது. ஹசுங்கம் தவிர்த்த சோழன்“ என்று வரலாற்றில் அறியப்படும் முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சியின் கீழ் உத்திரமேரூர் சிறிது காலம் இருந்துள்ளது. இவரது 47ஆவது ஆண்டு ஆட்சியை இந்தக் கல்வெட்டு செய்தி குறிக்கிறது.

இந்த கல்வெட்டில் சிறுகூற்ற நல்லூர் என்ற ஊர் குறித்தும் குறிப்புகள் உள்ளன. தற்போது சிறுமயிலூர் என வழங்கப்படும் ஊரே சிறுகூற்ற நல்லூராக இருக்க வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது. இந்தக் கல்வெட்டு முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டு. இது தற்போது சிவாலயத்தில் படிக்கட்டாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இதைப் பாதுகாக்க வேண்டும் - என்று உத்திரமேரூர் வரலாற்று ஆய்வு மையம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

## புனித வாரம்



"நான் என்றும் உங்களோடு இருப்பேன்" என்று கூறிய இயேசு எம்முடன் இருக்க தன் இறுதி இராவுணவில் அப்ப இரச வடிவில் எம்முடன் இருக்க வழி செய்தார். எங்கள் மீது கொண்ட அன்பினால் இயேசு தம்முடைய மரணம் நெருங்கி வருவதை அறிந்து நற்கருணையையும், குருத்துவத்தையும் ஏற்படுத்துகின்றார். இந்த வேளையில் அவரது நம்பிக்கைக்கு உரியவனாகிய பணப்பையை வைத்திருந்த யூதாஸ் பண ஆசையால் தன் குருவையே விலை பேசிய கொடிய நிகழ்வை புனித மத்தேயு எடுத்துக் காட்டுகின்றார்.

தெய்வத் திருமகனுக்கு விலைபேசுகின்றான் யூதாஸ். "எனக்கு என்ன தருவீர்கள்? நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுப்பேன்" என்று கூறினான். அவர்களோ முப்பது வெள்ளிக் காசு அவனுக்கு கொடுத்தனர். "அடிமையின் தன்மை பூண்டு மனிதருக்கு ஒப்பாகப் பிறந்தார்" என்ற வாக்குக்கு ஏற்ப ஒரு அடிமையின் விலையாக இயேசுவுக்கு முப்பது வெள்ளிக்காசு கொடுக்கப்படுகின்றது.

இயேசு செய்த குற்றம் என்ன? பிலாத்து கூட "இவரின் ஒரு குற்றமும் காணேன் என்றான்." ஆனால் யூதாசின் பணப்பற்று அவனது குருப்பற்றை கொன்றுவிட்டது. "செல்வம் இறையாட்சிக்கு உட்படுவதைவிட, ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது" என்ற ஆண்டவரின் வாக்கு யூதாசின் செயலால் உறுதியாயிற்று. இத் தவக்காலம் நம்மைச் சிந்திக்க அழைக்கின்றது. நம்மிடமுள்ள முறையற்ற ஆசைகளை களைவோம். கடவுளை நிராகரிக்கும் பாவச் செயல்களை களைவோம். எம் பாவங்களை போக்கும் இயேசுவே என்று மன்னிப்பு வேண்டுவோம்.

அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை

# கூட்டமைப்பு முடிவெடுக்காவிடின் புளொட் தனித்து முடிவெடுக்கும்!

யாழ்ப்பாணம், ஏப். 13

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக கொண்டுவரப்பட உள்ள குற்றப் பிரேரணை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக கலந்துரையாடி ஒரு முடிவு எக்க முடியாவிடில் தனித்து முடிவெடுக்க புளொட் தீர்மானித்துள்ளது.**

ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையை பொறுத்தமட்டில் நாங்கள் தனியாக முடிவு எடுப்பதை காட்டிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒரு முடிவு எடுத்தால் தான் அது பலமாக இருக்கும் என புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் மத்திய குழு கூட்டத்திற்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களாக முடிவு எடுக்கும்போது அது பலமாக இருக்கும். எந்தவிதமான பிரேரணை கொண்டு வந்தாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக மூன்று கட்சிகளும் கலந்துரையாடி ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்றும் மூன்று கட்சியும் இணைந்து தீர்மானம் எடுக்க முடியாவிட்டால் நாங்கள் தனியாக தீர்மானிக்க முடியும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கை மக்களை மிகப் பெரிய அளவில் பொருளாதார நெருக்கடி பாதித்திருக்கின்றது. ஆகவே, பொருளாதார பின்னடைவு நிச்சயமாக நீண்ட காலமாக இருந்து வந்த ஒன்று. இந்த நாட்டிலே யுத்தத்துக்காக செலவழிக்கப்பட்ட பெருந்தொகையான பணங்கள் அதற்காக பட்ட கடன்கள் அதனால் ஏற்பட்ட அழிவுகள் எல்லாம் சேர்த்தே பொருளாதார பின்னடைவுக்கு ஆரம்பிக்க காரணமாக உள்ளன.

போராட்டத்துக்கு ஜனாதிபதி சரியான பதில் ஒன்றை வழங்கவேண்டும். ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்று கூறியே மக்கள் போராடுகிறார்கள். அதனை ஜனாதிபதி செய்யமாட்டார் என்றே நான் நினைக்கின்றேன். பொருளாதாரத்தை முன்னேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார்.

இதேவேளை, இணுவில் பகுதியில் இடம்பெற்ற புளொட் மத்திய குழுக் கூட்டத்தில் அண்மையில் உயிரிழந்த கட்சியின் பொதுச் செயலாளருமான அமரர் க. சதானந்தத்தின் வெற்றிடத்திற்கு தற்காலிகமாக ஒருவர் நியமிக்கப்பட்டார்.

மத்திய குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான கஜதீபன், சிவநேசன் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# அதிகாரங்களை குறைக்க ஜனாதிபதி பச்சைக்கொடி

கொழும்பு, ஏப். 13

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்களைக் குறைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கவேண்டுமானால் அரசொன்று இருக்க வேண்டும். அந்த இடைக்கால அரசை அமைப்பதற்கு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

நிலையான அரசொன்று அமையும் பட்சத்திலேயே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெறலாம்- என்றார். (அ)

# மருத்துவ நிபுணர்கள் சங்கம் அரசுக்கு நான்கு யோசனைகள்

கொழும்பு, ஏப். 13

தற்போதைய நெருக்கடியில் இருந்து நாட்டை மேம்படுத்துவது தொடர்பான நான்கு யோசனைகளை மருத்துவ நிபுணர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கையளித்துள்ளது.

முதல் முன்மொழிவு விரைவான அரசியல் செயல்முறையின் மூலம் நிலையான அரச பொறிமுறையை நிறுவுவதை உள்ளடக்கியது. அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய இடைக்கால அரசு நிறுவப்பட வேண்டும் என்று சங்கம் கூறியது.

இதற்கிடையில், இடைக்கால அமைச்சரவை 15 உறுப்பினர்களுக்கு குறைவாக இருக்க வேண்டும், நாட்டின் நிதி கையாளுதல்கள் குறித்து பரந்த அறிவைக் கொண்ட ஒரு நபர் நிதி அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் என்று சங்கம் மேலும் கூறியது. (அ)

# சந்திரிகாவின் ஏற்பாட்டில் எதிர்க்கட்சிகள் சந்திப்பு!

கொழும்பு, ஏப். 13

தற்போதைய அரசியல் நெருக்கடியில் இருந்து மீள்வது குறித்து ஆலோசிப்பதற்காக அரசாங்கத்துக்கு எதிரான அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களிற்கிடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஏற்பாட்டில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம, பாட்டலி சம்பிக்க ரணவக்க, அனுர பிரியதர்சன யாப்பா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

கூட்டம் முடிவதற்கு முன்னதாகவே சஜித் பிரேமதாஸ அங்கிருந்து சென்று விட்டார்.

அரசாங்கத்திற்கு எதிரான கட்சிகளுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் இருப்பதால் இந்த நேரத்தில் செய்யவேண்டிய முன்னுரிமைகளை அடையாளம் காண ஒரு குழுவை நியமிக்கவேண்டியதன் அவசியம் பற்றி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

எந்தவொரு இடைக்கால ஏற்பாட்டையும் பரிசீலிப்பதற்கான முதல் படியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்கத்தில் இருந்து பிரிந்து சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்த தரப்புக்கள் ஜனாதிபதியை நீக்குவதற்கு ஆதரவாக இல்லை. அத்துடன், அமைச்சரவை கலைக்கப்பட்டாலோ அல்லது ஜனாதிபதி பதவி விலகுவதாலோ அடுத்த தலைமைத்துவம் தொடர்பில் அவர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை.

எனவே, இந்தக் கூட்டத்தில், என்ன செய்ய வேண்டும் என்பதை அடையாளம் காண ஒரு குழுவை அமைக்கக் கட்சிகள் முடிவு செய்தன.

இடைக்கால நிர்வாகத்திற்குப் பிறகும் எடுக்கவேண்டிய அரசியல் நடவடிக்கைகள் குறித்து பொது ஒருமித்த கருத்து இருக்க வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தனர். (அ)

# சுதந்திரக் கட்சியின் எம்.பி. பல்டி; இராஜாங்க அமைச்சு பதவி ஏற்பு

கொழும்பு, ஏப். 13

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார விவசாயத்துறை இராஜாங்க அமைச்சராக நேற்று முன் தினம் பதவியேற்றுள்ளார்.

நாட்டில் ஒரு புறத்தில் அரசியல் நெருக்கடி தலைதூக்கியுள்ள நிலையில் - மறுபுறத்தில் குதிரை பேரமும், கட்சி தாவும் படலமும் ஆரம்பமாகியுள்ளது.

இதன்படி பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவார் என அறிவிப்பு விடுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டாரவை, ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வளைத்துப் போட்டுள்ளது. அவருக்கு விவசாயத்துறை இராஜாங்க அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது கடந்த பொதுத்தேர்தலின்போது யாழ்ப்பாணம் உட்பட சில மாவட்டங்களில் தனித்தும், ஏனைய மாவட்டங்களில் கூட்டணி அமைத்தும் மொட்டு சின்னத்திலும் களமிறங்கியது. அக்கட்சியின் சார்பில் 14 பேர் பாராளுமன்றம் தெரிவாகினர். அங்கஜன் மட்டுமே சு.கவின் சார்பில் சபைக்கு வந்தார். ஏனையோர் மொட்டுச் சின்னத்தில்தான் சபைக்குத் தெரிவாகினர்.

அரச பங்காளிக் கட்சியாகச் செயற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடந்த 5ஆம் திகதி அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டது. கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட 14 எம்.பிக்களும் சபையில் சுயாதீனமாகச் செயற்படுவார்கள் என்ற அறிவிப்பும் விடுக்கப்பட்டது.

இந்நிலையிலேயே 14 பேர் அணியில் இடம்பெற்ற ஒருவர் தற்போது அரசுக்கு ஆதரவைத் தெரிவித்து, இராஜாங்க அமைச்சுப் பதவியைப் பெற்றுள்ளார்.

ராஜபக்ஷ குடும்ப உறுப்பினரான சசீந்திர ராஜபக்ஷ இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து விலகியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே சாந்த பண்டார உள்வாங்கப்பட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் 14 பேர், இ.தொ.காவின் இருவர் உட்பட பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படப் போவதாக 42 பேர் கடந்த 5 ஆம் திகதி அறிவித்திருந்தனர்.

இதனால் அரசின் சாதாரணப் பெரும்பான்மைகூட ஆட்டம் காணும் மட்டத்தில் இருந்தது. அதேவேளை, அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைக்கும் முயற்சியில் ஐக்கிய மக்கள் சக்தி தீவிரமாக இறங்கியுள்ளது. இந்நிலையிலேயே தமது இருப்பைத் தக்க வைத்துக்கொள்ளும் முயற்சியில் ஆளுங் கட்சியினர் தீவிரம் காட்டி வருகின்றனர். (அ)

# மொட்டு கட்சிக்குள் அதிரடி மறுசீரமைப்பு

## நாமலுக்கு உயர் பதவி

கொழும்பு, ஏப்.13

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய பதவிகளில் எதிர் வரும் நாட்களில் மாற்றம் ஏற்படுத்தப்படும். கட்சியின் முக்கிய பொறுப்பினை ஏற்குமாறு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

“நாட்டில் தற்போது தோற்றம் பெற்றுள்ள அரசியல் ஸ்தீரமற்ற தன்மைக்கு இன்னும் ஓரிரு நாட்களில் தீர்வுபெற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத்தை பலவீனப் படுத்த அரசாங்கத்திற்குள் ஒரு தரப்பினரால் மேற்கொள்ளப் பட்ட சூழ்ச்சி தற்காலிகமாகவே வெற்றி பெற்றுள்ளது. வெகு விரையில் பதிலளிப்போம்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியை மறுசீரமைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.அரசியல் நெருக்கடிக்கு தீர்வு கண்டவுடன் அரச தலைவர்களுடன் கலந்தாலோசித்து முக்கிய பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை கட்சியின் முக்கிய பொறுப்பினை ஏற்குமாறு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளோம். அரச தலைவர்களின் தீர்மானத்தை தொடர்ந்து அவர் சாதகமான தீர்மானத்தை முன்னெடுப்பார் என எதிர்பார்க்கிறோம்.

பொதுஜன பெரமுன செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் இருந்து விலகியுள்ளமை பிரதான குறைபாடாக இனங் காணப்பட்டுள்ளது.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் நிச்சயம் மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து செயற்படும். ஜனாதிபதி மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்தை மக்கள் நிச்சயம் ஆதரிப்பார்கள்.

தவறான சித்தரிப்புக்களே தற்போதைய எதிர்ப்பிற்கான காரணியாக அமைந்துள்ளது என்றார். (அ)



# நவாலி பகுதியில் ஓட்டோ விசமிகளினால் தீ வைப்பு

யாழ்ப்பாணம்,.ஏப். 13

நவாலிப் பகுதியில் ஓர் வீட்டில் நிறுத்தி வைத்திருந்த ஓட்டோ விசமிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

நவாலி ஜே/136 கிராம சேவகர் பிரிவில் உள்ள வீடு ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் இரவு சென்ற ஆறு பேர் கொண்ட கும்பலே இந்த வன்முறையில் ஈடுபட்டதாக வீட்டின் உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

ஓட்டோ முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதனால் சுமார் 10 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிப்பதோடு இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (அ)

# உறவினரிடையே முறுகல் படுகொலையில் முடிந்தது

கொழும்பு, ஏப். 13

உறவினர் இருவரிடையே ஏற்பட்ட முறுகலால் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் மாத்தறை மாலிமடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மத்திய பூங்கா பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில், மாலிமடை பிரதேசத்தை சேர்ந்த 43 வயது நபரே படுகொலையானார்.

இருவருக்கும் இடையில் முறுகலைத் தொடர்ந்து, படுகொலையான நபர் முன்னதாக லொறியொன்றில் அழைத்து செல்லப்பட்டு கிரள பிரதேசத்தில் வைத்து தாக்கப்பட்டு படுகொலை செய்யப் பட்டுள்ளார் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. படுகொலை செய்யப்பட்ட வரின் சடலம் கிரள காட்டுப் பகுதியிலிருந்து மீட்கப்பட் டுள்ளது.

பிரேத பரிசோதனைக்காக மாத்தறை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் 23 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# அரிசியின் விலை மேலும் உயரலாம்

கொழும்பு, ஏப். 13

எரிபொருள் மற்றும் உர பிரச்னை காரணமாக சிறுபோகத்தில் நெல் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் சந்தையில் அரிசியின் விலை தொடர்ந்தும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது. தற்போது சந்தையில், நாட்டரிசி ஒருகிலோகிராம் 210 முதல் 220 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

அதேநேரம், ஒரு கிலோகிராம் சம்பா அரிசி 230 ரூபாவுக்கும், கீரி சம்பா ஒரு கிலோகிராம் 270 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

எரிபொருள் பிரச்னையால், சிறுபோகத்தில் திட்டமிட்டவாறு பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள முடியாவிட்டால், எதிர்வரும் காலப்பகுதியில் அரிசியின் விலை மேலும் அதிகரிக்கும் என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ)

# அமைச்சு பதவியை துறக்குமாறு குடும்ப உறுப்பினர்களும் அழுத்தம்

## மனம் திறந்தார் அலி சப்ரி

கொழும்பு, ஏப். 13

அமைச்சு பதவியை இராஜினாமா செய்யுமாறு எனது குடும்ப உறுப்பினர்களும் அழுத்தம் கொடுத்தனர். எனவே, நான் நிதி அமைச்சர் பதவியை துறந்ததற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது .” - என்று நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டில் தற்போது நான் தான் நிதி அமைச்சர். சட்டப் பூர்வமாகவே அப்பதவியை வகிக்கின்றேன். எனது தலைமையிலான குழுவே 18 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியம் செல்லவுள்ளது.

நிதி அமைச்சு பதவியை ஏற்க நான் தயாராக இருக்கவில்லை. ஆனால் ஆளுங்கட்சியினர் விடுத்த கோரிக்கையால்தான் அந்த பதவியை



ஏற்றேன். அதன்பின்னர் எனக்கு அழுத்தங்கள் வந்தன. குடும்ப உறுப்பினர்கள்கூட, பதவி துறக்குமாறு வலியுறுத்தினர்.

பொருளாதார நிபுணர்கள் தான் நிதி அமைச்சு பதவியை ஏற்க வேண்டும் என்ற கருத்து சமூகத்திலும் நிலவியது. எனவே, தகுதியான ஒருவரை அப்பதவிக்கு நியமிக்க வழிவிட்டே நான் பதவி விலகினேன். எனினும், எவரும் அந்த பதவியை ஏற்கவில்லை. அதனால்தான் நாட்டு நலன் கருதி நான் ஏற்றேன்.” - என்றார் .(அ)

# மருந்து கொள்வனவுக்கு உலக வங்கி நிதி உதவி

கொழும்பு, ஏப். 13

அத்தியாவசிய மருந்து கொள்வனவுக்காக 10 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியினை வழங்குவதற்கு உலக வங்கி அனுமதியளித்துள்ளதாக நிதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அதேநேரம், எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதிக்குள் சமையல் எரிவாயு, மருந்து மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 500 மில்லியன் அமெரிக்க டொலரை விடுவிப்பதற்கு உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.(அ)

# அமைச்சரவை மாற்றம் பிற்போடப்பட்டது ஏன்?

கொழும்பு, ஏப். 13

கடும் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் நேற்று முன்தினம் இடம்பெறவிருந்த புதிய அமைச்சரவை நியமனம், இறுதி நேரத்தில் பிற்போடப்பட்டது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டால் அது, அரசுக்குள் மேலும் பிளவை ஏற்படுத்தும் என்பதாலும், சர்வக்கட்சி இடைக்கால அரசமைக்கும் முயற்சி தோல்வி அடையக் கூடாது என்பதாலுமே புதிய அமைச்ச ரவை நியமனம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதென அறிய முடிகின்றது.

அமைச்சு பதவிகளை இராஜினாமா செய்த ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் நேற்று முன்தினம் அமைச்சு பதவிகளை பொறுப்பேற்கவிருந்தனர்.

ரோஹித அபேகுணவர்தன, பவித்ரா வன்னியாராச்சி, காமினி லொக்குகே ,எஸ்.எம். சந்திரசேன உட்பட மேலும் சிலருக்கே அமைச்சு பதவிகள் வழங்கப்படவிருந்தன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், சுதந்திரக் கட்சி உட்பட 11 கட்சிகளின் பிரதிநிதிகளுக்கிடையில் கடந்த ஞாயிறு இரவு சந்திப்பொன்று இடம்பெற்றது. இறுதி முடிவு எதுவும் எட்டப்படாவிட்டாலும் பேச்சை தொடர்வதற்கு முடிவெடுக்கப்பட்டது.

அமைச்சரவையை நியமித்தால் அந்த பேச்சு தடைப்படும் என்ற நிலையிலேயே, அமைச்சரவை நியமனம் பிற்போடப்பட்டுள்ளது.

மக்கள் கோரிக்கைக்கு புறம்பாக அமைச்சரவை நியமிக்கப் படுமானால் டலஸ் அழகப்பெரும உட்பட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் சுயாதீனமாக செயற்படும் முடிவை எடுத்திருக்கக்கூடும். இதனை தடுப்பதும் ஒத்திவைப்பின் மற்றுமொரு நோக்கமாகும். (அ)

# சகல பதவிகளில் இருந்தும் சாந்த பண்டார எம்.பி. நீக்கம்

கொழும்பு, ஏப்..13

விவசாய இராஜாங்க அமைச்சராக பதவியேற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார அக்கட்சியின் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் கொள்கைகளுக்கு துரோகம் இழைத்துள்ளதாக சுதந்திரக் கட்சி குற்றம் சாட்டியிருந்தது. இந்நிலையில் அவரை கட்சியின் அனைத்து பதவிகளில் இருந்தும் நீக்குவதாக சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

(அ)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஏப். 13

கொரோனா தாக்கத்திலிருந்து உலகம் விடுபட வேண்டியும் அனைத்து மக்களுக்கும் சுபீட்மான வாழ்வு வேண்டியும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் அருளாசியுரையும் வேதபாராயண நிகழ்வில், நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தெல்லிப்பழை கட்டுவன் அகில இலங்கை சபரிகிரி ஜயப்ப சுவாமி தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ அ. ஐயப்பதாச குருக்கள் வேதபாராயணம் ஆற்றி அருளாசியுரையும் வழங்குவார்.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடியாக ஒலி பரப்பு செய்யப்படவுள்ளது. (ஐ)

# பொதுவான நோக்கத்துக்காகவே 42 எம். பிக்கள் இணைந்துள்ளோம்!

**சுசில் பிரேமஜயந்த**

கொழும்பு, ஏப்ரல் 13

அரசமைப்புக்கு - நாட்டில் காணப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு குறுகிய காலத்தில் எவ்வாறு தீர்வு காண்பது தொடர்பில் நாம் கலந்துரையாடி வருகின்றோம் என்று, பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் கூறிய அவர்,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை தீர்ப்பதற்காக பொதுவான நோக்கத்துக்காக 42 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்துள்ளோம். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

நாட்டில் சிறந்த நிதிமுகாமைத்துவம் இருக்கவில்லை. பல்வேறு காரணங்களால் நாட்டின் அத்தியாவசிய தேவைகளான உணவு மற்றும் எரிபொருள் என்பன இரண்டாம் மூன்றாம் இடங்களுக்கு சென்றது.

பொருளாதார நெருக்கடியுடனேயே நாட்டில் தற்போதைய பிரச்னை ஆரம்பமானது. முதலில் எரிவாயு பிரச்னை ஏற்பட்டது. அடுத்தாக எரிபொருளுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டது. உரப்பிரச்னை, களைநாசினி பிரச்னை என்பவற்றால் 23 இலட்சம் விவசாய குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

இதனால் நாட்டில் சகல பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மின்வெட்டு நடைமுறை, டொலர் பற்றாக்குறை என சகல நெருக்கடிகளுக்கும் நாடு தற்போது முகங்கொடுத்துள்ளது.

மக்கள் வாழ்க்கைக்கு என்றுமில்லாதவாறு பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன. உலகில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுடன் நாமும் சவால்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. ஆரம்பத்தில் பொருளாதார பிரச்சினையே காணப்பட்டது. தற்போது அந்த பிரச்னையுடன் அரசியல் பிரச்னையும் கலந்துள்ளது.

நான் மாற்றுக்கொள்கையுடன் இருக்கின்றேன். கடந்த வாரம் அமைச்சரவை விலகியது. எனக்கு தெரிந்த அரசியல் அறிதலுக்கு அமைய செய்வதற்கு ஒன்றுமில்லாது அமைச்சரவை ஒன்று பதவி விலகுகிறது என்பதை அறிவாளிகள் கூட்டம் ஏற்றுக்கொள்ளுமா?

சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடலுக்கு செல்ல வேண்டுமாயின் நாட்டில் அரசியல் உறுதிப்பாடு ஒன்று இருக்க வேண்டும். நாட்டில் இன்று அவ்வாறானதொரு நிலைமை இல்லை - என்றார். (கே)





## DPMC யின் பஜாஜ் வாகனங்களுக்கான வாகன வேலைத்தளம் மற்றும் பஜாஜ் அசல் உதிரி பாகங்கள் விற்பனை நிலையத்தின்

# கோலாகல திறப்பு விழா யாழ்ப்பாணத்தில்!

இலங்கையின் மிகப்பெரிய மற்றும் முக்கிய நிதி ரீதியான ஸ்திரமான கூட்டு நிறுவனங்களில் ஒன்றாக திகழும் டேவிட் பீரிஸ் குழுமம் நாட்டின் பொருளாதாரத்தையும், நாட்டு மக்களின் நலனையும் கருத்திற்கொண்டு ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகின்றது. நாடளாவிய ரீதியில் கிளைகளை அமைத்து அதன் சேவைகளை பல்வேறு பரிமாணங்களில் விஸ்தரித்து பல மைல்கற்களை கடந்துகொண்டிருக்கின்றது. அந்த வகையில் டேவிட் பீரிஸ் குழுமத்தின் அதன் பிரத்தியேகமான சேவைகளை தற்போது வடமாகாணத்திலும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

"வடமாகாண அபிவிருத்தி" எனும் கருப்பொருளைக்கொண்டு வடமாகாணத்தில் ஓர் அபிவிருத்தி முன்னேற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற டேவிட் பீரிஸ் குழுமத்தின் நீண்ட நாள் முயற்சிக்கான முதற்கட்ட நடவடிக்கைகள் கடந்த வருடத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. கடந்த காலங்களில் தொற்று நோய், கட்டுமானப்பொருட்களுக்கான தட்டுப்பாடு போன்ற அசாதாரண சூழ்நிலைகள் நாட்டில் நிலவிய போதிலும் கட்டுமானப்பணிகள் இடைநிறுத்தப்படாது தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.

முழுமையாக நிறைவடைந்த கட்டுமானப்பணிகளைத் தொடர்ந்து 2022 மார்ச் 16 ஆம் திகதி பஜாஜ் முச்சக்கர வணடிகள், மோட்டார் சைக்கிள்கள், QUTE - குவாட்ரி சைக்கிள் மற்றும் KTM மோட்டார் சைக்கிள்களிற்கான சேவை மற்றும் பழுதுபார்ப்புகளை மேற்கொள்ளும் வாகன வேலைத்தளம் மற்றும் பஜாஜ் அசல் உதிரி பாகங்கள் விற்பனை நிலையம் டேவிட் பீரிஸ் நிறுவனத்தின் தலைவர் திரு. டேவிட் பீரிஸ், திருமதி. பீரிஸ், திரு. ரோஹன திஸாநாயக்க, குழுமத்தின் தவிசாளர் மற்றும் நிர்வாக இயக்குநர்



மற்றும் முழு குழுமத்தினதும் சிரேஷ்ட தலைமையியளாளர்கள் ஆகியோரின் முன்னிலையில் இல. 405, பிரவுண் வீதி, கொக்குவில் கிழக்கில் திறந்து வைக்கப்பட்டது. இப் பிரம்மாண்ட திறப்பு விழாவில் டேவிட் பீரிஸ் குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் தலைமை நிர்வாகிகளும் கலந்துகொண்டனர். மேலும் பல அதிதிகள், முக்கியஸ்தர்கள், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் இதில் கலந்து சிறப்பித்தனர். வாகனலோகம், அசெட்லைன் லீசிங், டிபி லொஜிஸ்டிக்ஸ், டிபி க்ளோபல் வென்ச்சர்ஸ் மற்றும் டிபி இன்ஃபோடெக் போன்ற பல குழும நிறுவனங்கள் தங்களின் பல்வேறு வகையான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை இதன்போது காட்சிப்படுத்தின. இலைகுழைகள் மற்றும் தோட்ட/ பண்ணை கழிவுகளை பொடியாக்கும் ஸ்ரெடார் இயந்திரம் இங்கு விற்பனைக்காக காட்சிபடுத்தப்பட்டிருந்தது.

இரசாயனப் பசளைகளுக்கு தட்டுப்பாடு நிகழும் இக் கால கட்டத்தில் இலகுவான முறையில் குறுகிய காலத்தில் இயற்கை உரம் தயாரிக்க உதவிடும் ஸ்ரெடார் இயந்திரம் விவசாயிகளுக்கும், வீட்டுத்தோட்டத்தில் ஈடுபடுவோருக்கும் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

டேவிட் பீரிஸ் குழுமமானது வடமாகாணத்தில் அதன் அனைத்து குழு செயற்பாடுகளையும் அறிமுகப்படுத்தி அவற்றை பிரதேச ரீதியாகவும் விரிவுபடுத்தி வேலை வாய்ப்புகளையும் அதிகரித்து ஒட்டுமொத்த உள்ளூர் சமூகங்களின் வளர்ச்சியை கட்டியெழுப்ப உதவுகிறது என்பது யாவரும் அறிந்ததே. இதற்கு சிறந்த உதாரணம் பஜாஜ் வாகன லோக வாகனவேலைத்தளம் மற்றும் பஜாஜ் அசல் உதிரி பாகங்கள் விற்பனை நிலையமுமாகும்.

பஜாஜ் முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், QUTE - குவாட்ரி சைக்கிள் அல்லது KTM மோட்டார் சைக்கிள்கிற்கான சேவைகள், வாகனங்களை கழுவுதல், சுத்தப்படுத்தல் மற்றும் இதர சேவைகள், சிறு பழுதுபார்ப்பு வேலைகள், வாகன பரிசோதனைகள் மற்றும் மிக உயர்தரத்தில் மேற்கொள்ளப்படும் சேவைகள் என அனைத்தையும் இப்போது வடமாகாணத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

பஜாஜ் வாகனத்திற்கான இது போன்ற சேவைகள் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் போது ஏற்படும் செலவுகளை சமாளிப்பதற்கான சிறப்பு நிதியுதவியை அசெட்லைன் லீசிங் வழங்குகிறது. அத்தோடு பதிவுசெய்யப்பட்ட வாகனத்தை தேர்ந்தெடுக்க முடிவதோடு, குத்தகை மற்றும் காப்பீடு என்பவற்றையும் தற்போது ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம். திறந்து வைக்கப்பட்டுள்ள புதிய வாகனவேலைத்தளம் மற்றும் குழுமத்தின் அலுவலகங்களுக்குச் சென்று மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அனைத்து வாடிக்கையாளர்களையும் அன்போடு வரவேற்கின்றோம்.

■ ஆ. விஜயானந்த்

# சசிகலாவுக்கு எதிராக தீர்ப்பு: இனி அவருக்குள்ள வாய்ப்புகள் என்ன?



அதிமுகவில் இருந்து சசிகலாவை நீக்கியது செல்லும் என்று சென்னை உரிமையியல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அ.தி.மு.க மீது சசிகலா வுக்கு உரிமை இல்லை என்றாகிவிட்டது. இதுதொடர்பாக உயர் நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீடு செய்தாலும் பயன் உள்ளதா என்பது கேள்விக்குறிதான் என் கின்றனர் அரசியல் விமர்சகர்கள்.

அ.தி.மு.க பொதுச்செயலாளராக இருந்த ஜெயலலிதா, 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உடல்நலக் குறைவால் மரணமடைந் தார். இதையடுத்து அ.தி.மு.கவின் தற்காலிக பொதுச் செயலாளராக வி.கே.சசிகலா பொறுப்பேற்றார். இதுதொடர்பாக, 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பொதுக்குழு வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் அடுத்து வந்த சில வாரங்களில் சொத்துக்குவிப்பு வழக்கில் நான்காண்டு சிறைத் தண்டனையை சசிகலா பெற்றார். இதனால் அவர் சிறை செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.



இதன் காரணமாக, அ.தி.மு.கவை வழிநடத்தும் வகையில் டி.டி.வி.தினகரனுக்கு துணைப் பொதுச் செயலாளர் பதவியை வழங்கினார். மேலும், தமிழ்நாடு முதலமைச்சராக எடப்பாடி பழனிசாமி பதவியேற்றார். அதன்பின்னர் அ.தி.மு.கவில் நடந்த சில மாற்றங்களால் 2017ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ஆம் திகதி மீண்டும் அ.தி.மு.க பொதுக்குழு கூடியது. அந்தக் கூட்டத்தில் வி.கே.சசிகலாவையும் டி.டி.வி.தினகரனையும் கட்சிப் பொறுப்பில் இருந்தே நீக்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், அ.தி.மு.கவின் ஒருங்கிணைப்பாளராக ஓ.பன்னீர்செல்வமும் இணை ஒருங்கிணைப்பாளராக எடப்பாடி பழனிசாமியும் தேர்வு செய்யப்பட்டனர். அ.தி.மு.கவின் உள்கட்சி விதிகளை திருத்திய பிறகு



எடுக்கப்பட்ட இந்த முடிவுக்கு தேர்தல் ஆணையமும் ஒப்புதலை வழங்கியது. இந்தப் பொதுக்குழு செல்லாது, சட்டத்துக்குப் புறம்பானது எனக் கூறி சென்னை உரிமை யியல் நீதிமன்றத்தில் சசிகலா தரப்பில் வழக்கு தொட ரப்பட்டது.

## அ.தி.மு.க மனுவில் என்ன இருந்தது?

மேலும் அந்த மனுவில், அதிமுகவின் பொதுச் செயலாளராக நான் மட்டுமே பொதுக்குழுவை கூட்ட முடியும். அதைவிடுத்து ஓ.பன்னீர்செல்வமும் எடப்பாடி பழனிசாமியும் புதிய பதவிகளை உருவாக்கியது சட்டவிரோதம். இவர்கள் கூட்டிய பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் செல்லாது எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனுவை தொடக்க நிலையிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி ஓ.பி.எஸ், இ.பி.எஸ், செம்மலை ஆகியோர் மனுத்தாக்கல் செய்தனர். அந்த மனுவில், அ.தி.மு.கவின் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் ஆகிய பதவிகளுக்குத் தேர்தல் ஆணையம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த விவகா ரத்தில் சசிகலா தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த வழக்கில் இரு தரப்பு வாதங்களும் நிறைவ டைந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்பு வழங்கப்படுவதாக இருந்தது. அன்று நீதிபதி விடுப்பில் இருந்ததால், நேற்று முன் தினம் (11) தீர்ப்பு வழங்கப்பட்டது.

## நீதிமன்றம் தீர்ப்பு

அதன்படி, அ.தி.மு.கவில் இருந்து சசி கலாவை நீக்கியது செல்லும் எனவும் அவரது வழக்கு தள்ளுபடி செய்யப்படுவதாகவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் சசிகலா தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது.

"சிட்டி சிவில் நீதிமன்ற வழக்கில் சசிகலாவுக்கு எதிராக தீர்ப்பு வெளிவந்துள்ளதே?" என மூத்த பத்திரிகையாளர் ஷ்யாமிடம் கேட்டபோது,

"எந்தவொரு கட்சியையும் நீதிமன்றத்தை வைத்துக் கைப்பற்ற முடியாது. சென்னை உரிமையியல் நீதிமன் றத்தில் சசிகலா வழக்கு தொடர்ந்தார். சொத்துரிமை தொடர்பான வழக்குகளைப் போலவே இதையும் கையாள்வார்கள்.

அ.தி.மு.க மீதான உரிமை என்பது ஓ.பி.எஸ் மற்றும் எடப்பாடி பழனிசாமி ஆகியோரிடம் உள்ளது. இது உச்ச நீதிமன்றம் வரையில் உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. அந்தப் பொறுப்பில் இருந்து அவர்களை விடுவிக்கும் வேலையை கீழமை நீதிமன்றம் செய்யப் போவதில்லை. சிவில் சட்டப்படி யாரிடம் உரிமை உள்ளதோ அவர்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப் பார்கள். பொதுச் செயலாளர் என்ற தலைப்புக்கு முக்கியத்துவம் கிடைக்காது" என்கிறார்.

## அதிக ஆதாரங்கள் தேவை

தொடர்ந்து பேசுகையில், "ஓ.பி.எஸ், இ.பி.எஸ் ஆகியோரை அ.தி.மு.க மீதான உரிமையில் இருந்து விடுவிப்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் தேவை. உச்ச நீதிமன்றம் வரையில் சென்று நிரூபிக்கப்பட்ட வழக்கு இது. இந்தத் தீர்ப்பு சசிகலாவுக்கு ஆதரவாக வந்திருந்தாலும் ஓ.பி.எஸ், இ.பி.எஸ் ஆகியோர் மேல்முறையீட்டுக்குச் செல்வார்கள். ஆனால் கட்சி அவர்களிடம்தான் இருக்கும். அந்தவகையில் பார்த்தாலும் சசிகலாவுக்கு இதனால் லாப மில்லை. இது ஒருநாள் செய்தியாக மட்டுமே இருக்கும்" என்கிறார்.

"இனி வரும் நாள்களில் சசிகலாவுக்குள்ள வாய்ப்புகள் என்ன?" என்றோம்.

"தொடக்கத்தில் இருந்தே அவருக்கிருந்த வாய்ப்பு என்பது டி.டி.வி.தினகரனை வலுப் படுத்துவதுதான். காரணம், இந்த வழக்கில் இருந்து தினகரன் தன்னை விடுவித்துக் கொண்டார். 2019 ஆம் ஆண்டு அ.ம.மு.க என்ற கட்சியும் தொடங்கிவிட்டார். அதற்கு முன்னதாக ஆர்.கே.நகரில் போட்டியிட்டு இரட்டை இலையை தோற்கடித்தார். அந்த வகையில் மக்கள் மன்றத்தில் அவர் தன்னை நிரூபித்துவிட்டார். ஆனால், அதன்பிறகு நடந்த தேர்தல்களில் அவர் எடுபடவில்லை. பெங்களூருவில் இருந்து சசிகலா வந்த பிறகு, "அ.தி.மு.க பொதுச் செயலாளர் நான்தான்" என்றார். அதனை நிரூபிப்பதற்கு சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதிலும் அவருக்கு எதிராகத் தீர்ப்பு வந்துவிட்டது. இனி மேல்முறையீட்டுக்குச் சென்றாலும் அதனால் ஒரு பயனும் இல்லை" என்கிறார்.

மேலும், "1972 ஆம் ஆண்டு தி.மு.கவில் இருந்து எம்.ஜி.ஆரை நீக்கிய பிறகு நடந்த ஆலோசனைக் கூட்டங்களில், "நாம் போட்டி பொதுக்குழுவை கூட்டி தீர்மானம் போடுவோம். நீதிமன்றத்துக்குச் செல்வோம்" என அவருக்கு ஆலோசனை சொல்லப்பட்டது. ஆனால் அப்படியொரு முடிவை எம்.ஜி.ஆர் எடுக்கவில்லை. அ.தி.மு.கவை தொடங்கிய பிறகு 73 ஆம் ஆண்டு நடைபெற்ற திண்டுக்கல் இடைத்தேர்தலில் வெற்றி பெற்றார். அதன்பிறகு நான்கு இடைத்தேர்தல்களில் வென்றார். 1977ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதல்வரானார். காங்கிரஸ் கட்சியில் இருந்து 1969 ஆம் ஆண்டு இந்திரா காந்தியை நீக்கினர். அவரும் தேர்தல் மூலமாக நிரூபித்துவிட்டுத்தான் வந்தார். எனவே, மக்கள் மன்றத்தில்தான் நிரூபிக்க வேண்டும். நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை வைப்பதால் எந்தப் பயனும் இல்லை. காரணம், எந்த நீதிமன்றமாக இருந்தாலும் சட்டத்தின் நான்கு முனைகளுக்குள் தான் செயல்பட முடியும்," என்கிறார் அவர்.

"அ.தி.மு.க மீதான சசிகலாவின் உரிமையைப் பறித்து விட்டதால் அவருக்கு உரிமை இல்லை என்றாகிவிட டது. இதுதொடர்பாக உயர் நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீடு செய்யலாம். கீழமை நீதிமன்றத்தில் வழக்கு முடிவுக்கு வருவதற்கே ஐந்து வருடங்கள் ஆகி விட்டன. உயர் நீதிமன்றத்தில் எப்போது வழக்கு முடியும் எனத் தெரியாது. இது முடிவடையாத ஒன்றாகத் தான் பார்க்கிறேன்," என ஷ்யாம் கூறுகிறார்.

"அ.ம.மு.க வலுப்பெற்றால் அடுத்த பத்து ஆண்டு களில் நல்ல முடிவுகள் கிடைக்கலாம். தி.மு.க மீதான அதிருப்தி வாக்குகளை அவர்கள் பிரிக்கலாம். தற் போதைய நிலையில் அதிமுகவால் உடனடியாக வெற்றி பெற முடியாது. அனைவரும் ஒன்று சேர்ந்தால் அதற்கு வாய்ப்புள்ளது. ஆனால், எடப்பாடி பழனி சாமி பேசுவதைப் பார்த்தால் அதற்கு வாய்ப் புள்ளதாகத் தெரியவில்லை" என்கிறார் ஷ்யாம்.

ஈழநாடு





■ அ. நிக்சன்

# காலிமுகத்திடலின் கதை என்ன?

## வெறுமனே ராஜபக்ச குடும்பத்தின் ஊழல் மோசடி, அதிகாரத் துஸ்பிரயோகமாக மாத்திரம் காண்பிக்க, சிங்கள முற்போக்காளர்கள் பலர் திரைமறைவிலும் நேரடியாகவும் ஈடுபடுகின்றனர்.

“காலி முகத்திடலுக்கு நேரடியாகச் சென்று போராட்டம் பற்றி அவதானித்தேன். அங்கு அமைக்கப்பட்டுள்ள கொட்டகைகள் அனைத்தும் சர்வதேசத் தரம் வாய்ந்ததாகவே உள்ளன.

உணவு வகைகள் உட்பட செய்து கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வசதிகளையும் அவதானித்தால், மிகப் பெரிய நாட்டினுடைய முகவர்கள் சிலர் பின்னணியில் செயற்படுகின்றனரோ என்ற சந்தேகம் எழுகின்றது.

சாதாரண துண்டு துணிகளினால் அமைக்கப்பட்ட கொட்டகைகள் போன்று அவை தெரியவில்லை. அதாவது பாதிக்கப்பட்ட மக்கள் அமைக்கும் கொட்டகைகளுக்கு வித்தியாசம் தெரியும்.

கோட்டாபய ராஜபக்ச வீட்டுக்குப் போக வேண்டும் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால் இதனை வெறுமனே ராஜபக்ச குடும்பத்தின் ஊழல் மோசடி, அதிகாரத் துஸ்பிரயோகமாக மாத்திரம் காண்பிக்க, சிங்கள முற்போக்காளர்கள் பலர் திரைமறைவிலும் நேரடியாகவும் ஈடுபடுகின்றனர் என்பது பட்டவர்த்தனம் (கொழும்பில் அரசார்பற்ற நிறுவனங்களை வைத்திருக்கும் சில பிரமுகர்கள்)

ஆகவே, இப்போது சிங்கள இனவாதம் தீவிர பௌத்த தேசியவதிகளிடம் இருந்து, முற்போக்கு எனப்படும் மிதவாதச் சிங்களம் என்ற போர்வைக்குள் தற்காலிகமாகவும் பாதுகாப்பாகவும் பதுக்கி வைக்கப் பட்டுள்ளது. இந்த மிதவாதச் சிங்கள முற்போக்காளர் களையே ஈழத் தமிழர்கள் பலரும் தமக்காகக் குரல் கொடுப்போர் என்று 2009 வரை நம்பியிருந்த வரலாறும் உண்டு.

சிங்கள ஊடகவியலாளர்கள், சிங்களக் கல்வியாளர்கள் சிலரும் அவசர அவசரமாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சிங்கள இளைஞர், யுவதிகளின் மன நிலையை இலங்கைத் தேசியத்துக்கு ஏற்ப மாற்றி வருகின்றனர் என்பதையும் உணர முடிகின்றது.

ஏனெனில் ஆரம்பத்தில் யாருடைய உந்துதலும் இன்றி இயல்பாகவே நடத்தப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்ட சிங்கள இளைஞர்கள், யுவதிகள் பலரும் தெரிந்தோ தெரியாமலோ தமிழர்களின் போராட்டத்தை நியப்படுத்தித் தமக்குத் தெரிந்த ஓரிரு விடயங்களை ஆவேசமாகவும் பேசி வந்தனர்.

ஆனால் இப்போது அப்படி எவருமே பேசுவதில்லை. அதற்குக் காரணம் பௌத்த தேசியவாதத்தைத் தற்காலிகமாகக் கையில் எடுத்துப் பாதுகாத்து வரும் சிங்கள முற்போக்குவாதிகளே.

காலி முகத்திடலில் உள்ள இளைஞர்களுக்குக் கோட்டாபய ராஜபக்சவையும் அவரது குடும்பத்தையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டால், எல்லாமே சரியாகிவிடும் என்ற கருத்து மாத்திரமே சமூகவலைத்தளங்களில் ஊட்டப்படுகின்றது. ஆனால் முப்பது வருட போர் அதன் பின்னரான 12 வருடங்களில் வடக்குக் கிழக்கில் இராணுவ முகாம்களை நவீனமயப்படுத்தல் மற்றும் புத்தர் நிலை வைத்தல், சிங்களக் குடியேற்றங்களுக்கான நிதிகள் போன்ற காரணங்களே தற்போதைய நெருக்கடி நிலை என்று, போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களுக்கு சொல்வதற்குச் சிங்கள முற்போக்காளர்கள் விரும்பவில்லை. பாதுகாப்பு அமைச்சுக்கு 37 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டது ஏன் என்ற கேள்வியைக்கூட இவர்கள் எழுப்பவில்லை.

கோட்டாவுக்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் இனவாதத்தைத் தற்காலிகமாகக் கையில் எடுத்துப் பாதுகாத்து வரும் இந்தச் சிங்கள முற்போக்குவாதிகள் எல்லாவற்றையும் மூடி மறைக்கின்றனர். உண்மை தெரிந்த சிங்கள இளைஞர்களைக்கூடப் பேசவிடாமல் தடுக்கின்றனர். வெறுமனே ராஜபக்ச குடும்பத்தை வீட்டுக்கு அனுப்பும் பிரச்சினையாக மாத்தரமே இளைஞர்களைப் பேச வைக்கப்படுகின்றனர்.

இதுதான் கோட்டாவுக்கு எதிரான போராட்டத்தின் உண்மை நிலைமை. தயவு செய்து தமிழர்கள் இந்தப் போராட்டத்துக்குள் அவசரப்பட்டுப் பங்குப் பற்றி இலங்கைத் தேசியக் கொடிக்குள் ஈழத்தமிழர் விவகாரத்தை முடக்க வேண்டாம்.

பௌத்த தேசியவாதத்தைத் தற்காலிகமாகப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் இந்த சிங்கள முற்போக்குவாதிகள், ரணில் அல்லது சஜித்திடம் அல்லது வேறு யாரிடமாவது அவற்றை ஒப்படைத்துவிட்டு மீண்டும் தமிழர் பக்கம் வந்து, நீலிக்கண்ணீர் வடிப்பர். இனியாவது தமிழர்களுக்குப் பட்டறிவு வர வேண்டும்.

---

# ஐரோப்பிய நாட்டுக் கடைகளில் சூரியகாந்தி எண்ணெய் காலி!

## தானியங்கள், தாவர எண்ணெய் விலைகள் உலக அளவில் உயர்வு

● பாரிஸிலிருந்து குமாரதாஸன்.

உக்ரைனை உள்ளடக்கிய கருங்கடல் பகுதியை உலகத்தின “ரொட்டிக் கூடை” (breadbaskets) என்று வர்ணிப்பதுண்டு. கோதுமை, சோளம் போன்ற பாண் மற்றும் ரொட்டிக்கான தேவைகளை நிறைவு செய்கின்ற உற்பத்திப் பிராந்தியம் அது.

அங்கு வெடித்துள்ள போர் உலக சந்தைகளில் பெரும் அதிர்வலைகளை உருவாக்கியிருக்கிறது. சுமார் அறுபது ஆண்டுகளில் உணவுப் பொருள்களின் விலைகள் உலகளாவிய ரீதியில் மிக அதிகரிப்பைக் காட்டியிருப்பதாக உலக உணவு விவசாய நிறுவனம்தெரிவித்திருக்கிறது. குறிப்பாகப் போரினால் சூரியகாந்தி எண்ணெய்க்கான ஏற்றுமதி வழி தடைப்பட்டிருப்பது அதன் விலையை மட்டுமன்றி மாற்றுத் தாவர எண்ணெய் வகைகளின் விலைகளையும் உயர்த்தியிருக்கிறது.

ஐ.நாவின் உலக உணவு விவசாய நிறுவனத்தின் உலகளாவிய முக்கிய பொருள்களது விலைச் சுட்டி கடந்த பெப்ரவரி - மார்ச் மாதங்களில் 12.6 வீதமாக அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

தாவர எண்ணெய் வகைகளின் விலை 23 வீதத்தால் அதிகரித்துள்ள அதேசமயம் கோதுமை,சோளம் உட்பட தானியங்கள் 17 வீதத்தாலும் சீனி 7வீதமும் இறைச்சி வகைகள் 5 வீதமும் நாளாந்த பால் பொருள்கள் 3வீதமும் உயர்ந்துள்ளன. அறுவடை பாதிப்புகள், காலநிலை மாற்றம் காரணமாக உலக உணவு உற்பத்தி கடந்த பத்துஆண்டுகளில் வீழ்ச்சியைச் சந்தித்திருந்தது.

தற்போதைய போர் அதனை மேலும் பாதித்திருக்கிறது. உலக சூரிய காந்தி எண்ணெய் ஏற்றுமதியில் 70 வீதம் உக்ரைன், ரஷ்யா இரு நாடுகளில் இருந்துமே கிடைப்பதால் போரின் நேரடியான பாதிப்பு சூரிய காந்தி எண்ணெயின் விலையை எகிறச் செய்துள்ளது. பிரான்ஸ், ஜேர்மனி உட்பட ஐரோப்பிய நாடுகளில் மக்கள் தேவைக்கு அதிகமாக அதனை வாங்கிச் சேமிப்பதால் எண்ணெய்குச் செயற்கையான தட்டுப்பாடும்ஏற்பட்டுள்ளது.


பிரான்ஸ் சூரியகாந்தி எண்ணெய்த் தேவையின் மூன்றில் ஒரு பகுதியை உக்ரைனிடம் இருந்து வாங்குகிறது. நாட்டில் வரும் ஜூன் மாதம் வரை எண்ணெய்கையிருப்பு உள்ளது என்றும் தேவைக்குஅதிகமாக வாங்கித் தட்டுப்பாட்டை உரு வாக்க வேண்டாம் என்றும் அதிகாரிகள்கேட்டுள்ளனர்.



பல்வேறு அத்தியாவசியப் பொருள்களது விலை உயர்வால் ஏற்படுகின்ற வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் பண வீக்கம் என்பவற்றால் உலகின் சில பகுதிகளில் பட்டினி நிலை உருவாக்கக் கூடும் என்றும் அதனால் தோன்றக் கூடிய சமூக அமைதியின்மை இலங்கை போன்ற அரசியல் குழப்பங்களைப் பிறநாடுகளிலும் உருவாக்கலாம் என்றும் பொருளாதார நிபுணர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)** | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

...................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..........................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

...................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ...................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.....................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.....................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6    2) 8    **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745    **23.** 455
**24.** 11 100ml / 1100ml    **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190    2) 100    3) 290
**27.** 15 : 30    **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1    **31.** 2    **32.** 3
**33.** 2    **34.** 3    **35.** 2

## கல்வி tv CHANNEL-1

**13.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**13.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# எரிபொருள் நிலைய ஊழியர்கள் பொதுமக்களிடையே முறுகல்நிலை!

மட்டக்களப்பு, ஏப். 13

**மட்டக்களப்பு - ஊறணியில் எரிபொருள் நிலையத்தின் ஊழியர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே நேற்று முறுகல் நிலைமை ஏற்பட்டது.**

மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் எரிபொருளைப் பெறுவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன், நீளவரிசைகளில் காத்திருந்து எரிபொருள்களை பெறுகின்றனர்.

இந்நிலையில், நேற்று அதிகாலை ஊறணி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெருமளவான பொதுமக்கள் குவிந்திருந்தனர். தொழில் நிமித்தம் செல்பவர்கள் இவ்வாறு அங்கு கூடியிருந்த நிலையில், எரிபொருள்கள் கையிருப்பில் இல்லை என்று திரும்பச் செல்லுமாறு ஊழியர்கள் கூறினர்.

ஆனால், இதேநேரம் சில கார்களுக்கு எரிபொருள் நிரப்பப்பட்டதை அவதானித்தவர்கள் இது தொடர்பில் கேள்வி எழுப்பினர்.

இதைத் தொடர்ந்து இரு தரப்பினரிடையேயும் எழுந்த வாக்குவாதம் முறுகல்நிலை



வரை சென்றது.

எனினும், அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோருக்காக மட்டுமே கையிருப்பிலுள்ள எரிபொருள் வழங்கப்படுவதாக எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் மக்களுக்குக் கூறினர். இதைத் தொடர்ந்து நிலைமை ஓரளவு சுமுக நிலைக்கு வந்ததது.

எனினும், நாம் அன்றாடம் எமது தொழிலை செய்தால் தான் எங்கள் குடும்பத்துக்கு உணவு வழங்க முடியும். எரிபொருள் இல்லாமையால் நாம் பெரும் இழப்புக்களை சந்திக்கிறோம் என்று பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தெரிவித்தனர். (ஐ)



## சமையல் எரிவாயு தரக்கோரி திருமலை நகரில் ஆர்ப்பாட்டம்!

திருகோணமலை, ஏப். 13

சமையல் எரிவாயு பெற்றுத் தருமாறு கோரி திருகோணமலை நகர பிரதான வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.எரிவாயுவுக்காக நேற்றுமுன்தினம் காலைமுதல் நீண்ட நேரம் காத்திருந்து கிடைக்காத நிலையிலேயே மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், தமிழ் சிங்கள புத்தாண்டு காலத்தை ஒட்டி இவ்வாறு சமையல் எரிவாயு உட்பட ஏனைய பொருட்களுக்கும் வரிசையில் காத்திருந்து பெற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நோன்பு காலங்களில் சமைப்பதற்கு கூட மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு இல்லை எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம் மக்கள், வீதி நடுவிலிருந்து நோன்பை திறந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வாகனத்திலிருந்து வீழ்ந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்!

மட்டக்களப்பு, ஏப். 13

வாகனத்திலிருந்து தவறி வீழ்ந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வாழைச்சேனை - நாவலடியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஏறாவூரை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான உஷானார் முகமது சியாம் (வயது 36) என்பவரே உயிரிழந்தார்.

குறித்த நபர் குறித்த நபர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனது நண்பர்களுடன் வவுனியாவிலிருந்து விற்பனைக்காக பலாப்பழங்களை கொள்வனவு செய்து கொண்டு சிறிய ரக வாகனத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். வாகனத்தின் பின் இருக்கையிலிருந்து அவர் தவறி வீழந்து படுகாயமடைந்தார்.

வாழைச்சேனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் மரணமானார்.

வாழைச்சேனை நீதிமன்றபதில் நீதிவான் வேண்டுதலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம். எஸ். எம். நசீர் சடலத்தை பார்வையிட்டு மேலதிக விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கைக்குண்டு மீட்பு

திருகோணமலை, ஏப். 13

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டு மீட்கப்பட்டதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலைகாணி உரிமையாளர் வடிகான் அமைப்பதற்காக வெட்டப்பட்ட குழியிலிருந்தே கைக்குண்டு மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பெண் தலைமை குடும்பத்துக்கு சிறுவணிக நிலையம் அன்பளிப்பு

மட்டக்களப்பு, ஏப். 13

கிழக்கு மாகாண சுவிஸ் உதயம் அமைப்பின் ஏற்பாட்டில் பெண் தலைமை குடும்பம் ஒன்றுக்கு சிறுவர்த்தக நிலையம் ஒன்று அமைத்து வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்லடி, திருச்செந்தூர் 2ஆம் குறுக்குத் தெருவிலுள்ள குடும்பம் ஒன்றுக்கே இந்த கடை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனை கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண கிளையின் செயலாளர் திருமதி ரொமிலா செங்கமலனின் ஒழுங்கமைப்பிலும் தலைமையிலும் நடைபெற்ற நிகழ்வில் சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண கிளையின் தலைவர் மு. விமலநாதன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

சுவிஸ் உதயம் தாய் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க சுவிஸ் உதயம் தாய் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் குமாரவேல் தர்மபாலனின் 2 இலட்சம் ரூபாய் அன்பளிப்பில் இந்தக் கடை அமைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இளைஞர் பாராளுமன்ற எம். பிக்கள் ஆஸி. தூதரக அதிகாரியுடன் சந்திப்பு

கொழும்பு, ஏப். 13

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரக அதிகாரியுடன் இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முப்தி ஆகியோர் அண்மையில் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பில், இலங்கையின் உயர் கல்வி, வேலைவாய்ப்பு, வெளிவிவகாரம் மற்றும் சுற்றுலாத் துறை போன்றவற்றில் இளைஞர்களின் நிலைப்பாடு தொடர்பாகவும், அதிலுள்ள குறைகள் குறித்தும் ஆராயப்படப்பட்டன. அத்துடன், இந்தத் துறைகளில் அவுஸ்திரேலிய இளைஞர்களின் நிலைப்பாடு குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலின் பின்னர், இலங்கையின் வேலைவாய்ப்பு , உயர்கற்கை வீதம்,



உயர் கற்கை சலுகைகள், வெளியுறவுத்துறை மற்றும் சுற்றுலாதுறை மேலும் வளர்வதற்கான தேவைப்பாடுகள் குறித்தும் விசேடமாக இலங்கை, அவுஸ்திரேலியா இளைஞர்களின் உறவுகளை வலுப்படுத்தும் செயல்திட்டங்களுக்கான

ஆதரவை எதிர்காலங்களில் வழங்குமாறும் கேட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இரு நாடுகளினதும் உறவு இளைஞர்களின் ஊடாகவும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்றும் இளைஞர் பாராளுமன்ற வெளி விவகார பிரதியமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

## ஆசிரியர் வீட்டில் கைவரிசை; 54 பவுண் நகைகள் திருட்டு!

அக்கரைப்பற்று, ஏப். 13

ஆசிரியர் ஒருவரின் வீட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளை நுழைந்தவர்கள் 54 பவுண் நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

அம்பாறை - ஆலையடிவேம்பு பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

வீட்டின் யன்னலை உடைத்து உள்ளே நுழைந்த கொள்ளையர்கள் குடும்பத்தினர் உறங்கிக் கொண்டிருந்த அறையை பூட்டி விட்டு மற்றைய அறையிலிருந்த அலுமாரியை உடைத்து அங்கிருந்த நகைகளை திருடியுள்ளனர்.

திருட்டுப்போனவற்றில் ஆசிரியரின் சகோதரி, ஆசிரியரின் மனைவி, அவரின் தாயார் ஆகியோரின் 3 தாலிக்கொடிகள் உட்பட 54 பவுண் நகைகள் அடங்கும் என்று தெரிய வருகின்றது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவினர், அம்பாறை தடயவியல் விசாரணை பிரிவினர் என பல தரப்பினரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ)



# கிழக்கில் ரஷ்யாவின் தாக்குதலை முறியடித்தன உக்ரேனிய படைகள்

கீவ், ஏப்.13

ரஷ்யா கிழக்கில் புதிய தாக்குதலுக்கான தயார்படுத்தல்களுக்காக இராணுவ வாகனங்களை நகர்த்தி வருவதாகவும் உக்ரைனின் இராணுவம் அறிவித்துள்ளது.

இருப்பினும் டோனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளில் ஆறு தாக்குதல்களை முறியடித்ததாகவும் நான்கு டாங்கிகள் பல ரஷ்ய வாகனங்களை அழித்ததாகவும் உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும் ஒரு விமானம் மற்றும் இரண்டு ஹெலிகொப்டர்கள் உட்பட ஏழு வான் இலக்குகளைத் தாக்கியதாகவும் உக்ரைனின் இராணுவம் அறிவித்துள்ளது. டொன்பாஸ் பிராந்தியத்தில் ரஷ்யா தனது துருப்புக்களின் எண்ணிக்கையை இரட்டிப் பாக்க அல்லது மும்மடங்காக அதிகரிக்கும் என மேற்கத்தேய நாடுகளின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# உக்ரைன் வான் பாதுகாப்பு அமைப்புகள் அழித்தொழிப்பு

## ரஷ்யா அறிவிப்பு

மொஸ்கோ, ஏப்.13

ஐரோப்பிய நாடொன்றால் உக்ரைனுக்கு வழங்கப்பட்ட வான் பாதுகாப்பு அமைப்புகளை தாக்கி அழித்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

உக்ரைனின் 0-300 வான் பாதுகாப்பு ஏவுகணைகளை செலுத்தும் 4 அமைப்புகளை ஞாயிற்றுக்கிழமை ஏவுகணைத் தாக்குதல்கள் மூலம் அழித்துவிட்டதாகவும் இந்தத் தாக்குதலில் உக்ரைன் இராணுவத்தினர் 25 பேர் கொல்லப்பட்டதாகவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் இகோர் கொனாஷென்கோ தெரிவித்தார்.

இந்த வான் பாதுகாப்பு அமைப்புகளை ஓர் ஐரோப்பிய நாட்டிடமிருந்து உக்ரைன் பெற்றிருந்தது எனவும் அவர் கூறினார்.

தங்களது தரைப் படையினருக்கு வான்வழியாக பாதுகாப்பு கொடுப்பதில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து இந்த நடவடிக்கையை ரஷ்யா மேற்கொண்டுள்ளது.

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24-ஆம் திகதி ரஷ்யா போரைத் தொடங்கியது. ஆரம்பத்தில் அதிவேகமாக முன்னேறியபோதும் உக்ரைன் படைகளின் கடும் எதிர்ப்பு காரணமாக ரஷ்ய படைகள் பல இடங்களில் பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தது. மேலும், தலைநகர் கீவ்வை கைப்பற்றும் ரஷ்ய படைகளின் முயற்சியும் இதுவரை வெற்றி பெறவில்லை.

உக்ரைனின் வான் பரப்பை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாததால், ரஷ்யா தனது தரைப் படையினருக்கு வான் வழியாக பாதுகாப்பு அளிப்பதில் நெருக்கடியை எதிர்கொண்டது. தரைப் படையினரின் முன்னேற்றம் தடைப்பட்டது. மேலும் பல இழப்புகளும் ஏற்பட்டன.

இந்நிலையில், உக்ரைனின் வான் பாதுகாப்பு அமைப்புகள் தாக்கி அழித்துள்ளதாக ரஷ்யா திங்கட்கிழமை தெரிவித்தது.

எனினும் இந்த வான் பாதுகாப்பு அமைப்புகளை உக்ரைனுக்கு ஸ்லோவேகியா அளித்ததாகத் தெரியவந்துள்ள நிலையில், அந்த வான் பாதுகாப்பு அமைப்புகள் தாக்கப்பட்டதற்கான ஆதாரம் இல்லை என அந்த நாடு தெரிவித்துள்ளது.

ஆனால் டினிப்ரோ என்ற இடத்தில் இந்த வான் பாதுகாப்பு அமைப்புகளை அழித்ததாக ரஷ்யா கூறியுள்ளது. ஏற்கனவே இதுபோன்ற வான் பாதுகாப்பு அமைப்புகளை மிகோலாய், கார்கிவ் பிராந்தியங்களிலும் அழித்ததாக ரஷ்யா முன்னாள் தெரிவித்திருந்தது.

உக்ரைனின் பல பகுதிகளில் ரஷ்யாவின் முன்னேற்றம் முறியடிக்கப்பட்ட நிலையில், நகரப் பகுதிகளில் வான்வழித் தாக்குதலை ரஷ்யா அதிகரித்தது. இத்தாக்குதலில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக உக்ரைன் புகார் தெரிவித்ததையடுத்து, ரஷ்யாவுக்கு சர்வதேச நாடுகளின் எதிர்ப்பு வலுத்தது.

இதைத் தொடர்ந்து, உக்ரைனின் கிழக்குப் பகுதியில் உள்ள டான்பாஸ் பிராந்தியம் எனப்படும், ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள லுஹான்ஸ்க், டொனட்ஸ்க் பிராந்தியங்களை நோக்கி ரஷ்யா கவனத்தை திருப்பியுள்ளது. இதற்காக ஜெனரல் அலெக்சாண்டர் ட்வோர் னிகோவ் என்பவரை நியமித்துள்ளதாக அமெரிக்காவை சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 48 இலட்சம் சிறுவர், குழந்தைகள் உக்ரைனில் இருந்து இடம்பெயர்வு!

## ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் அறிக்கை

கீவ், ஏப். 13

ரஷ்யாவின் படையெடுப்பு காரணமாக சுமார் 48 இலட்சம் உக்ரேனிய குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் இடம் பெயர்ந்துள்ளதாக ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 24 ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்ததில் இருந்து சுமார் ஒன்றரை மாதங்களில் மூன்றில் இரண்டு உக்ரேனிய குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் உள்நாட்டுக்குள்ளும் வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந்துள்ளதாகவும் ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் கடந்த திங்கட்கிழமை கூறியுள்ளது.



உக்ரைனில் உள்ள 7.5 மில்லியன் குழந்தைகள் மற்றும் சிறுவர்களில் 4.8 மில்லியன் பேர் மிகக் குறுகிய காலத்தில் இடம்பெயர்ந்திருப்பது எனது 31 வருட மனிதாபிமானப் பணியில் கண்டிராத ஒன்று என உக்ரைன் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்து திரும்பிய ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதிய அவசர கால திட்டப் பணிப் பாளது மானுவல் போன் டைன் தெரிவித்துள்ளார்.

தங்கள் வீடுகளில் தங்கியிருப்பதாக மதிப்பிடப்பட்ட 3.2 மில்லியன் குழந்தைகளில், ஏறக்குறைய பாதி பேர் போதிய உணவு இல்லாமல் ஆபத்தில் உள்ளனர் என ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பேசிய அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் மரியுபோல், கெர்சன் போன்ற நகரங்களில் சிறுவர்கள், குழந்தைகளின் நிலைமை இன்னும் மோசமாக இருக்கலாம்“ என்று அவர் எச்சரித்தார், அங்கு தண்ணீர் மற்றும் சுகாதார சேவைகள் இல்லை. அத்துடன், உணவு மற்றும் மருந்து விநியோகம் தடைபட் டுள்ளது எனவும் அவர் குறிப் பிட்டார்.

இதற்கிடையில் ரஷ்யா 1,21,000 க்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் சிறுவர்களை உக்ரைனில் இருந்து அழைத்துச் சென்றுள்ளதாகக் கூறிய ஐ.நாவுக்கான உக்ரைன் தூதர் செர்ஜி கிஸ்லிட்சியா, இந்தக் குழந்தைகளின் நலன் பேணும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகக் கூறினார். (அ)

## ஓய்வூதிய வயதெல்லை அதிகரிப்பு:

# மக்கள் விருப்பு அறிய வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என்கிறார் மக்ரோன்

பரிஸ், ஏப்.13

முதற் சுற்று வாக்களிப்பின் இறுதி முடிவுகள் உத்தியோக பூர்வமாக அறி விக்கப்பட்டுள்ளன. அதன்படி மக்ரோன் 27.84 வீதம், மரின் லூ பென் 23.15 வீதம் மெலன்சோன் 21.95 வீதம் வாக்குகளை பெற்றுள்ளனர். லூ பென்னுக்கும் மூன்றாம் இடத்தில் உள்ள மெலன்சோனுக்கும் இடையில் 421,420 வாக்குகள் வித்தி யாசம் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



BFM தொலைக்காட்சிக்கு நேர்காணல் வழங்கிய மக்ரோன், தேர்தலில் போட்டியிட்டுத் தோற்ற எல்லா வேட்பாளர்களுடனும் கலந்துரையாடல்களை நடத்த விரும்புவதாகக் கூறியிருக்கிறார். கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில்,

ஓய்வு பெறும் வயது எல்லையை 65 ஆக அதிகரிப்பது உட்பட எத்தகைய பொருளா

தாரச் சீர்திருத்தங்களும் மக்கள் கருத்தறியும் பொது வாக்கெடுப்புக்கு விடப்படலாம் என்பதைக் கோடி காட்டினார். பொது சன வாக்கெடுப்பை அவர் நிராகரிக்கவில்லை.

“ஒய்வூதியச் சீர்திருத்தம் ஒரே இரவில் வந்து விடாது. அதன் மூலம் நாட்டைப் பிளவுபடுத்த விரும்பவில்லை” என்று அவர் தெரிவித்தார்.

மரின் லூ பென்னுடன் நேரடி விவாதத்துக்குச் செல்வாரா என்று கேட்ட போது,

“லூ பென்னை ஓர் அரசியல் தலைவராக மதிக்கிறேன். அவரது கொள்கைகளை மட்டுமே எதிர்க்கிறேன் ”என்று மக்ரோன் பதிலளித்துள்ளார்.

இரண்டாவது சுற்றுக்கு முன் பாகத் தனது கடும் போக்குத் தன்மையைத் தணிப்பது போன்ற சில கருத்துக்களை லூ பென் வெளியிட ஆரம்பித்துள்ளார்.

குறிப்பாகத் தனது ஐரோப்பிய எதிர்ப்பு வாதத்தைத் தூக்கிப்பிடிப்பதைத் தவிர்த்து வருகிறார். ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவது தனது இலக்கு அல்ல என்று கூறியிருக்கிறார். அத்தியாவசியப் பொருள்கள் உட்பட நூறு வகையான பொருள்களை வரி ஏதும் இல்லாமல் மக்களுக்கு வழங்கப் போவதாக சலுகை அறிவிப்பு ஒன்றையும் அவர் விடுத்திருக்கிறார்.

தீவிர வலதுசாரி மரின் லூ பென்னுடன் கடும் போட்டியை எதிர்கொள்கின்ற மக்ரோனுக்கு இறுதிச் சுற்று இந்தத் தடவை கடந்த 2017 போன்று மிக இலகுவாக வெற்றிவாய்ப்பை வழங்கி விடாது.

சவாலுடனேயே அவர் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டி இருக்கும் என்று தேர்தல் கள நிலைவரத்தை அவதானிப்போர் மதிப்பிடுகின்றனர். இதனை நேற்று முதல் சுற்றில் முதலிடம் பெற்றுத் தெரிவாகிய பின்னர் செய்தி ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகை யில் மக்ரோன் வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருந்தார்.

“ஆட்டம் இன்னும் நடக்கவேயில்லை. அது இனி மேல் தான்” - என்று அவர் வரவிருக் கும் இரண்டாவது சுற்றில் எதிர்கொள்ளக் கூடிய சவாலை விவரித்தார்.




# ஆசிய கிண்ண தொடரை நடத்தும் வாய்ப்பை இழக்கிறது இலங்கை?

கொழும்பு, ஏப். 13

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையால் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியை நடத்தும் உரிமையை இலங்கை இழக்கும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவிவரும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்நிலை மேலும் தொடருமானால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம், ஆசிய கிண்ணத் தொடரை இலங்கையில் நடத்த முடியாது போகும். இதனால், இந்தப் போட்டித் தொடரை வேறொரு நாட்டில் நடத்த வேண்டி ஏற்படும் என உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)




# 2024 உலகக் கிண்ணத்தில் 20 அணிகள் பங்கேற்கும்!

டுபாய், ஏப். 13

2024 இருபது - 20 உலகக் கிண்ணத்தில் 20 அணிகள் பங்கேற்கும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி) அறிவித்துள்ளது.

டுபாயில் நடைபெற்ற ஐ. சி. சி. கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் 2024 இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டி நடைபெறுகிறது. இந்தப் போட்டிக்கு 12 அணிகள் நேரடியாகத் தகுதி பெறும்.

அஸ்திரேலியாவில் இந்த வருடம் நடைபெறும் இருபரு - 20 உலகக் கிண்ணத் தொடரில் முதல் 8 இடங்களைப் பிடிக்கும் 8 அணிகள் அடுத்த உலகக் கிண்ணத்துக்கு நேரடியாகத் தகுதி பெறும்.

போட்டியை நடத்தும் நாடுகளான அமெரிக்காவும் மேற்கிந்தியத் தீவுகளும் நேரடித் தகுதியை அடையும். மீதமுள்ள இரு அணிகள், தரவரிசையின் அடிப்படையில் தெரிவாகும்.

ஒருவேளை மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் 8 இடங்களில் இடம்பெற்றுவிட்டால், தரவரிசையின் அடிப்படையில் மூன்று அணிகள் தேர்வு செய்யப்படும். இதர 8 அணிகளும் தகுதிச்சுற்றின் அடிப்படையில் தெரிவாகவுள்ளன. ரி -20 உலகக் கிண்ணத் தொடரில் 20 அணிகள் பங்கேற்கவிருப்பது இதுவே முதல்முறை. (ஐ)

# இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தேர்தல் விரைவில்!

கொழும்பு, ஏப். 13

பிபாவின் அறிவுறுத்தலின் பேரில் தயாரிக்கப்பட்ட இலங்கை உதைபந்தாட்ட யாப்பின் வரைவு, விளையாட்டு அமைச்சின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

புதிய யாப்பு தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சின் கருத்தை எதிர்வரும் 19 ஆம் திகதி இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்திடம் உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் அமல் எதிரிசூரிய தெரிவித்துள்ளார்.

அந்த அங்கீகாரத்துடன் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அடுத்த தேர்தல் எவ்வாறு நடத்தப்படும் என்பது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹைதராபாத் அணியிடம் மண்கௌவியது குஜராத்!

மும்பை, ஏப். 13

இந்தியன் பிரீமியர் லீக் இருபது - 20 தொடரில் குஜராத் ரைட்டன்ஸ் அணி முதல் தடவையாக தோல்வியைத் தழுவியுள்ளது. அந்த அணியை ஹைதராபாத் அணி 8 விக்கெட்களால் வெற்றி கொண்டது.

மும்பையில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் இந்தத் தொடரில் அறிமுகமான அணியான குஜராத் ரைட்டன்ஸ் அணியும், ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியும் மோதின.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் ரைட்டன்ஸ் 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

அனுபவம் வாய்ந்த முன்வரிசை வீரர்களான ஷப்மன் கில் (7), மத்தியூ வேட் (19) மற்றும் இளம் வீரர் சாய் சுதர்ஷன் (11), 5ஆம் இலக்க வீரர் டேவிட் மில்லர் (12) ஆகியோர் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறினர்.

ஒருபுறம் விக்கெட்கள் சரிந்த போதிலும் மறுபுறத்தில் திறமையாக துடுப்பெடுத்தாடிய ஹார்திக் பாண்ட்யா, 4ஆவது விக்கெட்டில் டேவிட் மில்லருடன் 40 ஓட்டங்களையும் 5 விக்கெட்டில் அபினவ் மனோகருடன் சரியாக 50 ஓட்டங்களையும் பகிர்ந்து அணியைப் பலப்படுத்த முயற்சித்தார்.

மனோகர் 21 பந்துகளை



எதிர்கொண்டு 5 பெண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 35 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

கடைசி ஓவரில் மேலும் 2 விக்கெட்கள் சரிந்தன.

ஹார்திக் பாண்ட்யா 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் புவ்னேஷ்வர் குமார் 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் த. நடராஜன் 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் சார்பாக ஆடுகளம் நுழைந்த துடுப்பாட்ட வீரர்கள் திறமையை வெளிப்படுத்த 19.1 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்று அபார வெற்றியீட்டியது.

அபிஷேக் ஷர்மா, கேன் வில்லியம்சன் ஆகிய இருவரும் நிதானம் கலந்த வேகத்துடன் துடுப்பெடுத்தாடி ஆரம்ப விக்கெட்டில் 53 பந்துகளில் 63 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் ஷர்மா 42 ஓட்டங்களுடன் களம் விட்டகன்றார்.

மொத்த எண்ணிக்கை 101 ஓட்டங்களாக இருந்தபோது ராகுல் திரிபதி 17 ஓட்டங்கள் பெற்ற நிலையில் உபாதை காரணமாக ஓய்வு பெற்றார்.

மேலும் 28 ஓட்டங்கள் மொத்த எண்ணிக்கைக்கு சேர்ந்தபோது வில்லியம்சன் 57 ஓட்டங்களுடன் (4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகள்) ஆட்டமிழந்தார்.

நிக்கலஸ் பூரண், அய்டன் மார்க்ரம் ஆகியோர் அதிரடியாக துடுப்பெடுத்தாடி பிரிக்கப்படாத 3ஆவது விக்கெட்டில் 18 பந்துகளில் 39 ஓட்டங்களைப் பகிர்ந்து ஹைதராபாத்தின் வெற்றியை உறுதிசெய்தனர்.

பூரண் 18 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகள் அடங்கலாக 34 ஓட்டங்களுடனும் மார்க்ரம் 8 பந்துகளில் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். பந்துவீச்சில் ஹார்திக் பாண்ட்யா 27 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ரஷீத் கான் 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ஐ)

# பங்களாதேஷுடனான டெஸ்ட் தொடர் தென்னாபிரிக்கா வசம்!

போர்ட் எலிசபெத், ஏப். 13

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இரண்டாவது இனிங்ஸில் 80 ஓட்டங்களுக்கு பங்களாதேஷ் அணி ஆட்டமிழந்தது. இதனால் டெஸ்ட் தொடரை 2-0 என முழுமையாக வென்றுள்ளது தென்னாபிரிக்க அணி.

தென்னாபிரிக்காவில் விளையாடிய ஒருநாள் தொடரை 2-1 என வென்றது பங்களாதேஷ். இதையடுத்து

தென்னாபிரிக்கா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றது. டர்பனில் நடைபெற்ற முதல் டெஸ்டை 220 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது தென்னாபிரிக்க அணி.

கேபெராவில் (போர்ட் எலிசபெத்) நடைபெற்ற 2ஆவது டெஸ்டில் முதல் இனிங்ஸில் தென்னாபிரிக்க

அணி, 453 ஓட்டங்கள் குவித்தது. ஆனால், பங்களாதேஷ் அணியால் 217 ஓட்டங்களே எடுக்க முடிந்தது.

2ஆவது இனிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது தென்னாபிரிக்க அணி. இத



னால் பங்களாதேஷ் அணி வெற்றி பெற 413 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

3ஆம் நாள் முடிவில் பங்களாதேஷ் அணி, 3 விக்கெட் இழப்புக்கு 27 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்நிலையில், இறுதிநாளான திங்கட்கிழமை பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர்கள் தென்னாபிரிக்க அணியை சமாளிக்க முடியாமல் வேகமாக விக்கெட்களை பறிகொடுத்தனர்.

இதனால் அந்த அணி, 23.2 ஓவர்களில் 80 ரன்களுக்கு ஆட்டமிழந்தது பங்களாதேஷ் அணி. இதனால் 2ஆவது

டெஸ்டை 332 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற தென்னாப்பிரிக்க அணி, டெஸ்ட் தொடரை 2-0 என

முழுமையாக வென்றது.

2-வது இனிங்ஸில் 7 விக்கெட்களை எடுத்த கேஷவ் மஹாராஜ் ஆட்ட நாயகனா கவும் தொடர் நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டார். இந்த டெஸ்டில் 9 விக்கெட்டுகளும் டெஸ்ட் தொடரில் 16 விக் கெட்களும் அவர் எடுத்துள்ளார்.

2 டெஸ்டுகளிலும் வங்கதேச அணியின் 2ஆவது இனிங்ஸில் தென்னாபிரிக்க சுழற்பந்து வீச்சாளர்களான மஹாராஜும் ஹார்மரும் பங்களாதேஷ் அணியின் அனைத்து விக்கெட்களையும் வீழ்த்தியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிராக குற்ற பிரேரணை கொண்டுவர முடிவு!

## ராஜித சேனாரத்ன எம். பி.

கொழும்பு, ஏப். 13

**தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் அதேவேளை, ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பிரதான எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

அத்துடன், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதுடன் அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தத்தை நீக்கி, 19 திருத்தத்தில் காணப்பட்ட சிறந்த விடயங்களை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடிய இடைக்கால அரசாங்கத்துடனேயே தமது கட்சி இணையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இன்றளவிலே நாடளாவிய ரீதியில் “கோ ஹோம் கோட்டா“ (வீட்டிற்குச் செல்லுங்கள் கோட்டா) என்ற கோஷம் மிகவும் வலுவாக ஒலிக்கின்றது.

இரசாயன உர இறக்குமதி இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, உரத்தை வழங்குமாறுகோரி விவசாயிகளிடமிருந்து ஆரம்பித்த போராட்டம், இப்போது ஒட்டுமொத்த நாட்டுமக்கள் மத்தியிலும் வியாபித்துள்ளது. கடந்த இரு தினங்களாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வருகை தந்திருக்கும் மக்கள் காலிமுகத் திடலில் தங்கியிருந்து “கோ ஹோம் கோட்டா“ என்ற கோஷத்துடன் போராடுகின்றார்கள்.



இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேச நாடுகள் பலவற்றிலும் வாழும் இலங்கையர்களும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள். இந்த அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்தியவர்களே இப்போது அவர்களைப் பதவி விலகுமாறு வலியுறுத்துகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் பிரதான எதிரணி என்ற அடிப்படையில் நாம் முன்னெடுக்கவேண்டிய விடயங்கள் அடங்கிய யோசனைகளை கட்சிக்குள் நிறைவேற்றியிருக்கின்றோம்.

இதன்படி முதலாவதாகத் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டுவருவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதுடன், அதற்கு ஆதரவாகக் கையெழுத்துப்பெறும் நடவடிக்கைகள் கடந்த வாரமே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

இதேவேளை ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப்பிரேரணையைக் கொண்டுவருவதற்கும் தீர்மானித்துள்ளோம். இதற்கு ஆதரவாக 113 உறுப்பினர்கள் கைச்சாத்திடும் பட்சத்தில், அதனை விவாதத்திற்கு எடுப்பதா? இல்லையா? என்பதை சபாநாயகர் தீர்மானிக்கவேண்டும். ஆனால் , தில் 150 பேர் கையெழுத்திட்டால் சபாநாயகரின் அபிப்பிராயம் அவசியமற்றதாக மாறும்.

இதேவேளை ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப் பிரேரணையை நிறைவேற்றி, அவரை நீக்கிய பின்னர் தற்போது நடைமுறையில் உள்ள ஜனாதிபதி முறைமையைத் தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம் அனைவரும் எதிர்பார்க்கின்ற பலனை அடைந்துகொள்ளமுடியாது. ஆகவே, அடுத்தகட்டமாக எமது நாட்டிற்குப் பலவருடகாலமாக நெருக்கடியை ஏற்படுத்திவரும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதுடன், அரசியலமைப்பிற்கான 20ஆவது திருத்தத்தை நீக்கி, 19ஆவது திருத்தத்தில் உள்ள சிறந்த விடயங்களை மீண்டும் நடைமுறைக்குக்குக் கொண்டுவரவேண்டும் என்பதில் அக்கறையுடன் இருக்கின்றோம்.

இந்த விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஏனைய தரப்பினருடன் எமது கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ பேச்சுக்களை முன்னெடுத்திருந்தார்.

எனவே மேற்கூறப்பட்ட எமது நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் அமைக்கப்படுகின்ற இடைக்கால அரசாங்கத்திற்கு மாத்திரமே நாம் ஆதரவு வழங்குவோமே தவிர, கோட்டாபய ராஜபக்ஷ அல்லது மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைக்கப்படுகின்ற அரசாங்கத்தில் ஒரு போதும் இணையமாட்டோம் - என்றார். (ஐ)



# காலிமுகத்திடல் போராட்டத்தில் தாக்குதல் நடத்த சதித் திட்டம்?

கொழும்பு, ஏப். 13

காலிமுகத்திடலில் நேற்றும் தொடர்ந்த “கோ ஹோம் கோட்டா” என்ற போராட்டக் களத்தில் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்காணிப்பை அதிகப்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மிரிஹானை - ஜனாதிபதி இல்லத்தின் அருகிலான ஆர்ப்பாட்டத்தை குழப்ப எடுக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் நடவடிக்கையைப் போன்று, திட்டமிட்ட குழுவினரை ஆர்ப்பாட்டக்காரர்களிடையே அனுப்பி வன்முறைகளை தூண்டும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமைகள், காலி முகத்திடலை அண்மித்த - ஜனாதிபதி செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை குறையும்போது, இடம்பெறலாம் எனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், இந்த தொடர் முற்றுகை போராட்டத்தை 24 மணி நேரமும் கண்காணிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள சுயதீன குழுக்களும், தனிநபர்களும் இந்த கோரிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முன்வைத்துள்ள நிலையில், அது தொடர்பில் அவதானம் செலுத்தி ஆணைக்குழுவும் ஆர்ப்பாட்டத்தை கண்காணித்து வருவதாக அறிய முடிகிறது.

ஆர்ப்பாட்டத்தை குழப்ப, அல்லது அவர்கள் மீது வன்முறையை பிரயோகிக்க ஏதும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவா என்பது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக் குழு தொடர்ந்து உன்னிப்பாக அவதானித்து வருவதாக அவ்வாணைக் குழுவின் உயரதிகாரி ஒருவர் கூறினார். (ஐ)

# சட்டவிரோத எரிபொருள் விற்பனை: இன்று முதல் விசேட சுற்றிவளைப்பு

கொழும்பு, ஏப். 13

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத எரிபொருள் விற்பனையைக் கட்டுப்படுத்த இன்று புதன்கிழமை முதல் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து பாவனையாளர்கள் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர். அவர்கள் பெரிய கலன்கள், போத்தல்களில் தேவைக்கும் அதிகமாக எரிபொருளை பெற்று செல்கின்றனர்.

எரிபொருள் தட்டுப்பாடு சீரான மின் விநியோகத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் அதனை கருத்தில் கொண்டு மட்டுப்படுத் தப்பட்டளவிலானே எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனினும் பாவனையாளர்களின் அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக சீரான எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் சிலர் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு சட்டவிரோத எரிபொருள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அளவுக்கு அதிகமான எரிபொருளை பெற்றுச் செல்லும் தரப்பினர், அதனை தமது வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களில் வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்கின்றமை எமது கவனதுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே, விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு சட்டவிரோத எரிபொருள் விற்பனையில் ஈடுபடுவர்களை கைது செய்யுமாறு பொலிஸ் மா அதிபரால் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட் டுள்ளது.

இதற்கமைவாக கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்ட 68 சுற்றிவளைப்புகளில் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்ட 8,025 லீற்றர் பெற்றோல், 726 லீற்றர் டீசல், மண்ணெண்ணெய் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சுற்றிவளைப்புகளை இன்று முதல் கடுமையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (கே)

# தம்பதியர் படுகொலை!

இரத்தினபுரி, ஏப். 13

கூரிய ஆயுதத்தால் தாக்கி கணவன் மற்றும் மனைவி ஆகியோர் கொலை செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி - கொடகவெல - பல்லேவத்தை பகுதியிலேயே இந்தத் தம்பதியர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்டனரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலை சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொடக்கவெல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## வியுக்தியார் பதில்கள்



வாராவாரம் உங்கள் கேள்விகளுக்கு வியுக்தியார் பதிலளிக்கவிருக்கிறார். அது அரசியல், சமூகம், சமயம் என்று எந்த துறையில் உங்களுக்கு சந்தேகம்இருந்தாலும் கேள்விகளை அனுப்புங்கள். வியுக்தியார் தனக்கே உரிய பாணியில் பதில் தருவார்.

கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:

வியுக்தியார் பதில்கள்,
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# பொருளாதாரத்துக்கான போரை ஆயுதங்களால் வெல்ல முடியாது

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஏப். 13

பொருளாதார யுத்தத்தை ஆயுதங்களால் வெற்றிகொள்ள முடியாது. மக்களை முட்டாளாக்கியது போதும். ஜனநாயக ரீதியான நம்பிக்கையில்லா பிரேரணை மற்றும் குற்றப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு கூறிய அவர் மேலும் கூறுகையில்,

ஜனநாயகத்துக்காகவே இளைஞர்கள் வீதியில் இறங்கியுள்ளனர். அவர்களின் போராட்டத்தை சரியாக புரிந்துகொள்ள வேண்டும். இராணுவத்தினரை முன்னிலைப்படுத்தி உயிரைக் காப்பாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்த போதிலும், யுத்தத்தில் வெற்றி பெற்ற சரத் பொன்சேகா உள்ளிட்ட வீரர்களை பழிவாங்கியது யார் என்பது உலகுக்குத் தெரியும்.

இராணுவத்தினரின் கௌரவத்தை காட்டிக்கொடுத்தது யார் என்பதும் அனைவருக்கும் தெரியும். 20 ஆவது திருத்தத்தை நீக்கி 19 ஆவது திருத்தத்தை பலப்படுத்தவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கும், ஜனநாயகத்திற்காக நம்பிக்கையில்லா பிரேரணை, குற்றப் பிரேணை போன்றவற்றுக்கு அப்பால் அரசியலமைப்பு ரீதியான எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கத் தயங்கப் போவதில்லை.

இன்று சந்தர்ப்பவாதத்தின்படி உறுப்பினர்கள் மற்றும் அமைச்சு பதவிகளுக்காக இடமாற்றங்கள் இடம்பெறுகின்றன. நாட்டு மக்கள் அதனை கோரவில்லை. இன்று சீர்குலைந்த பொருளாதார கொள்கை காணப்படுகின்றது. சர்வதேச உறவுகளும் இழக்கப்பட்டுள்ளது.

புதிய தொலைநோக்குப் பார்வையுடன் சர்வதேசத்தை வெற்றிகொள்ள வேண்டும். தற்போதைய நெருக்கடிக்கு திடமான மற்றும் விஞ்ஞானபூர்வமான தீர்வே தேவை. பொருளாதார யுத்தத்தை ஆயுதங்களால் வெற்றிக்கொள்ள முடியாது.

நாட்டில் ஜனநாயகம், பொருளாதாரம் மற்றும் அரசியலுக்கு புதிய வேலைத்திட்டம் தேவை. நாட்டை கட்டியெழுப்புவதற்காக நாம் அனைவரும் ஒன்றாக எழ வேண்டும் - என்றார். (கே)

# நான்காவது நாளாகவும் தொடர்ந்தது போராட்டம்!

கொழும்பு, ஏப். 13

"கோட்டா கோ ஹோம்" என்ற கோஷத்துடன் கொழும்பு - காலிமுகத் திடலில் ஆரம்பமான போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது.

நாட்டின் பொருளாதாரம் மிகவும் பின்னடைவை சந்தித்துள்ள சூழலில் இளைஞர், யுவதிகளின் பங்கேற்புடன் ஜனாதிபதி செயலகம் முன்பாக கூடாரம் அமைத்து கடந்த 9ஆம் திகதி இந்தப் போராட்டம் ஆரம்பமானது.

போராட்டத்தின் நான்காம் நாளான நேற்று மழை, வெயிலையும் பொருட்படுத்தாமல் போராட்டக் காரர்கள் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனிடையே, இந்தப் போராட்டத்தை குழப்பும் நோக்குடன் ஆணுறைகள் வீதியில் நிறைந்து கிடக்கும் படத்தை சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளனர். வேறு ஓரிடத்தில் எடுக்கப்பட்ட படங்களைப் பதிவிட்டே இவ்வாறான விஷமப் பிரசாரம் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அரசுக்கு எதிரான போராட்டங்களில் தமிழர்களும் ஒன்றிணைய வேண்டும்!

## லண்டன் புலம்பெயர் தமிழர் அமைப்பு

லண்டன், ஏப். 13

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் தொடர்ந்து நடைபெறும் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் எல்லா சமூகத்தவருடனும் தமிழர்களும் பூரணமாக ஒன்றிணையவேண்டும் என்று லண்டன் புலம்பெயர் தமிழர் அமைப்பு கோரிக்கை விடுத்திருக்கிறது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் சாத்வீக முறையிலான போராட்டம் ஒன்றுதான், தற்போதைய நிலைமையில் அரசுக்கு எதிராக தமது ஆத்திரத்தை வெளிப்படுத்துவதற்கு மக்களுக்கு உள்ள ஒரே வழியாகும். இதில், புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் அனைவரும் இதில் ஒன்றிணைந்து, அவர்களுக்கு எமது பூரண ஆதரவை அளிப்போம்.

எல்லா சமூகங்களும் பங்குகொள்ளும் இந்த நடவடிக்கையை, ஒரு தேசிய எதிர்ப்பு போராட்டமாகவே நாம் கருதுகிறோம். எனினும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்தப் போராட்டத்தில் இதுவரை பெருமளவு ஈடுபாடின்மை காணப்படுவதற்கு, சமூகத்தின் சில தீவிரவாத சக்திகள் ஓரளவு காரணமாகின்றன.

மற்றைய சமூகங்களுடனும் இணைந்து, எல்லா தமிழர்களும் இதில் ஒற்றுமைக் கரம் நீட்ட நாம் அழைப்பு விடுக்கின்றோம். இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அத்தியாவசிய உணவு, மருந்து தேவைகளுக்காக அவசர நிதி ஒன்றை, இந்த எதிர்ப்பு இயக்கத்துக்கான எமது ஆதரவின் அடையாளமாக ஏற்படுத்தவும் நாம் தீர்மானித்திருக்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

## ராஜபக்ஷ...

"பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, அரசியல் கட்சிகளை கூறு போடுவது ராஜபக்ஷக்களுக்கு கைவந்த கலை. அந்த செயலை தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் செய்துள்ளார். இந்த செயலை அனுமதிக்க முடியாது. பிரதமராக மஹிந்த வேண்டாம். அமைச்சரவைக்கு ராஜபக்ஷக்களும் வேண்டாம். உறுப்பினர்களை விலைக்கு வாங்கி புதிய ஆட்சி அமைந்தால் அந்த அரசுக்கு எதிராக போராடுவோம். அரசை முன்னெடுக்க இடமளிக்கமாட்டோம். சாந்த பண்டாரவையும் விலைக்கே வாங்கியுள்ளனர்" - என்றார். (ஐ)

# சிப்பாயின் சடலம் மீட்பு!

நெடுந்தீவு, ஏப். 13

நெடுந்தீவு கடலில் காணாமல் போன கடற்படை சிப்பாய் அனலைதீவு கடலில் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது காரைநகர் மற்றும் நெடுந்தீவு கடற்படையினருக்கு சொந்தமான படகுகள் நேற்று முன்தினம் மோதி விபத்துக்குள்ளாகியிருந்தன.

இதில் கடற்படை சிப்பாய் ஒருவர் காணாமல் போயிருந்தார். இந்நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டார். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கம்பளையை சேர்ந்த சாகர பியந்த ஜயசேகர (வயது -27) என்பவராவார். (ஐ)

## வங்குரோத்து...

கையிருப்பு கடந்த மார்ச்சில் 193 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. இந்த ஆண்டு ஜூலையில் 400 கோடி டொலர்கள் வெளிநாட்டுக் கடனை செலுத்தவேண்டியுள்ளது.

22 மில்லியன் மக்கள் வசிக்கும் எமது நாடு ஒருபோதும் கடனை செலுத்துவதிலிருந்து தவறியதில்லை. இந்த நிலையை முன்னிலைப்படுத்தி கடன் செலுத்தாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நாம் அத்தியாவசிய இறக்குமதிகளில் கவனம் செலுத்த வேண்டும். வெளிநாட்டுக் கடனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை - என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, இந்த ஆண்டில் இலங்கை 700 கோடி டொலர் கடனை திருப்பிச் செலுத்தவேண்டும். இதில் 300 கோடி டொலர்கள் பற்றாக்குறையாக இருக்கும் என்று பொருளியலாளர்கள் குழு ஒன்று கணித்துள்ளது. (ஐ)

## அத்தியாவசிய...

மருந்துகள் உட்பட உயிர் காக்கும் மருந்துகளுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த இக்கட்டான நிலையை கடந்து மீள்வதற்கு உள ஆரோக்கியம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை ஒவ்வொருவரும் பேணவேண்டும். மதுபான, போதைப் பொருள் பாவனையை தவிர்த்து வீதி ஒழுங்குகளை கடைப்பிடித்து விபத்துகள் ஏற்படாதவாறு செயல்படுதல் சிறந்தது.

இளைஞர்கள் வன்முறையை தவிர்த்து தேவையற்ற பிரச்னைகளில் ஈடுபடாது இருப்பது ஆரோக்கியமானது. பொது மக்கள் உணவுப்பழக்கங்களில் கவனம் வைத்து உள விருத்திச் செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ-2)

## பேராசிரியர்...

செயல்பாடுகளில் சிறந்து விளங்கியிருந்தார்.

மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றவராகவும் சிறந்த நிர்வாகியாகவும் விளங்கிய அவரின் இழப்பு யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறைக்கு பேரிழப்பாகும் என்று சக பேராசிரியர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-2)

## 237 மருந்து...

பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இதய நோயாளிகள், இருமல், சளி, வெறி நாய்க்கடி போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான மருந்துகள் தற்போது கிடைக்கவில்லை. சிறப்பு சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளையும் மருந்துப் பற்றாக்குறை தாக்கம் செலுத்தும்.

டொலர் நெருக்கடியானது முழு நாட்டையும் தாக்கியுள்ளது. அதனால் அரச மருத்துவமனைகள் மட்டுமன்றி தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களிலும் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது - என்றும் சொன்னார். (ஐ)

## தமிழகத்துக்கு...

தடுப்பதில் அரசு அதிக கவனம் செலுத்தி வருகின்றது.

கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதிக்கு பின்பு இலங்கையில் இருந்து 39 பேர் தமிழ் நாட்டுக்கு அகதிகளாக தப்பிச் சென்றுள்ளனர். அதனை தடுக்க கடற்படை மற்றும் இராணுவத்தினர் மன்னார் மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதற்காக இரு தினங்களின் முன்னர் கடற்படை அதிகாரிகள் கூட்டம் நடத்திய அதேநேரம் இராணுவ அதிகாரிகள் தனித்தனியான சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## எரிபொருள்...

ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, தத்தமது பிரதேசங்களில் எரி பொருள் மற்றும் எரிவாயு வழங்கலில் நிலவும் முறைகேடுகள் தொடர்பான அனைத்து முறைப்பாடுகளையும் குறித்த இலக்கத்தின் ஊடாக அறிவிக்கமுடியும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 18ஆம் திகதி...

அதேவேளை, இடைக்கால அரசு அமைக்கும் முயற்சி தோல்வி கண்டுள்ளதென புதிதாக இராஜாங்க அமைச்சு பதவியை பெற்ற சாந்த பண்டார அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## 10மில்லியன்...

கொடுப்பனவை வழங்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும், நாட்டின் பொருளாதாரம் மீண்டும் நல்லநிலைக்கு திரும்பும் வரையில் பெற்றோல், எரிவாயு பிரச்னைகளுக்கு இடைக்கால தீர்வு காண அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தற்போது இந்திய கடன் வரிசையை நீட்டிக்க முயல்கிறது. இந்த முயற்சி வெற்றியடைந்தால் இலங்கை தனது கடன்களை உடனடியாக திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை - என்றும் அவர் கூறினார். (ஐ)

## இலங்கையின்...

பைடனுடன் மோடி கலந்துரையாடியதாக, இந்திய அதிகாரிகளை மேற்கோள் காட்டி, த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த உரையாடலின்போது உக்ரைன் விவகாரம் குறித்து இருவரும் அதிக கரிசனை செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

## அரச...

குறித்த பொருட்களுக்கு எவ்வித பற்றாக்குறையும் ஏற்படவில்லை என அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ள சுகாதார அமைச்சு, பற்றாக்குறை நிலவுவதாக சமூக ஊடகங்களின் கூறப்படும் மருந்துகளின் கையிருப்பு தொடர்பான விவரங்களை அறிவித்துள்ளது.

அதில், மேல் மாகாணத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளில் உள்ள, பற்றாக்குறை எனக் கூறப்படும் மருந்து மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களின் கையிருப்பு விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (அ)

ஈழநாடு
Eelanadu

# சாந்த பண்டார எம்.பி அரசியல் தற்கொலை

## கடுமையாக சாடுகிறார் மைத்திரி

கொழும்பு, ஏப். 13

சாந்த பண்டார எம்.பி செய்த செயலானது அவரின் அரசியல் வாழ்வை நிறைவுக்கு கொண்டு வந்துவிட்டது. அவர் செய்தது அரசியல் தற்கொலை. அவரின் இந்த செயல் மிகவும் வேதனை யளிக்கிறது என சிறீ லங்கா சுதந் திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிப தியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - விவசாயிகளின் பிரச்னையே அர சாங்கத்திற்கு எதிராக வெளிவந்த முதலாவது எதிர்ப்பு நடவடிக்கையாகும்.

மேலும், இலங்கைக்கு உதவி செய்த நாடுகள் அனைத்தையும் தற்போதைய அரசு மறந்துவிட்டு செயற்பட்டன. உதாரணமாக ஜப்பான் அரசானது இலங்கைக்கு சுமார் 70 ஆண்டுகளாக உதவி செய்து வரும் நாடு. ஆனால் தற்போதைய அரசு அந்த நாட்டை புறக்கணித்து செயற்பட்டது.

மேலும், சிறீ லங்கா பொதுஜன பெரமுன பாராளு மன்றம் உறுப்பி னர்களின் செயற்பாடுகளை அவதா னிக்கும் போது, நாட்டில் எந்த வொரு பிரச்னையும் இல்லாதது போன்றே காணப்படுகிறது.

நாடு தற்போது பாரிய நெருக் கடிக்குள் வீழ்ந்துள் ளது. எனவே இதனை கட்டியெழுப்ப வேண்டும். அதனாலேயே நாங்கள் தற்போதைய அரசாங்கத்திலி ருந்து வெளியேறினோம். சுதந்திரக் கட்சியானது இனி அரசாங்கத்துடன் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ளாது.

தற்போது நாட்டிலுள்ள மக்கள் எரிபொருள், எரி வாயு, மின்சாரம் இன்றி பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்த நாட்டிலுள்ள சுமார் 2 இலட் சம் பேருக்கு எந்தவொரு பிரச்னை யும் இருக்காது. ஆனால் ஏனைய அனைவருக்கும் பொரு ளாதார பிரச்னை இருக்கிறது. அவர்கள் நாளாந்தம் மிகவும் சிரமப்பட்டே வாழ்ந்து வருகின்றனர். இது எமக்கு நன்றாக தெரியும், ஆனால் அரசு தெரிந்தும் தெரியாததுபோல இருக்கிறது.சாந்த பண்டார எம்.பி நேற்று செய்த செயலானது அவரின் அரசியல் வாழ்வை நிறைவுக்கு கொண்டு வந்துவிட்டது. அவர் செய்தது அரசியல் தற்கொலை. அவரின் இந்த செயல் மிகவும் வேதனையளிக்கிறது. - என்றார். (அ)




## மரண அறிவித்தல்



தோற்றம் 25 - 04 - 1960

மறைவு 04 - 04 - 2022

### கனகசபை சிவலோகநாதன் (ஆச்சி சிவா)

*புங்குடுதீவு பத்திரகாளி அம்மன் ஆலய உரிமையாளர், நாடகக் கலைஞர்*

யாழ். புங்குடுதீவு 10ஆம் வட்டாரம் வீராமலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கனக சபை சிவலோகநாதன் அவர்கள் 04-04-2022 திங்கட்கிழமை அன்று லண்டனில் இறைவனடி சேர்ந் தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சிவகாமி (அம்மணி ) காலஞ்சென்றவர்களான மருதப்பு - சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ் சென்றவர்களான கனகசபை - கண்ணம்மா தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஞானவடிவேல் மற்றும் கமலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், சந்திரகலா அவர்களின் பாசமிகு கண வரும்,சணோஷன், சாரங்கன், பிரவீன், சஸ்வினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி, குணபாலச்சந்திரன் மற்றும் தெட்சணாமூர்த்தி, மகாலட்சுமி ( முன்னாள் ஆசிரியை, கொட்டடி நமசிவாய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோ தரரும்,காலஞ்சென்ற மகாலிங்கம், சரஸ்வதி தம்பதி களின் பாசமிகு மருமகனும், சசிகலா, இந்திரகலா, கமலஹாசன், சசிகுமார், சசிகரன், சுலோ சனா, கமலா தேவி, மோகனசுந்தரம், காலஞ்சென்ற மனோன் மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குமார், குகணேசன், கமலலோசினி, சத்தியமதி, லனுஜா ஆகியோரின் அன்பு உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

*பார்வைக்கு*
Wednesday, 13 Apr 2022 6:00 PM - 9:00 PM
Saturday, 16 Apr 2022 2:00 PM - 5:00 PM
Divinity Funeral Care 209 Kenton Rd, Kenton, Harrow HA3 0HD, United Kingdom

*கிரியை*
Sunday, 17 Apr 2022 7:30 AM
Oshwal Ekta Centre 366A Stag Ln, London NW9 9AA, United Kingdom

*தகனம்*
Sunday, 17 Apr 2022 10:00 AM
Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ஆசிரியை மகாலட்சுமி**
**சகோதரி.**

*தொடர்புகளுக்கு:*
**தெட்சணாமூர்த்தி - சகோதரன்** Mobile : +94774068479
**மகாலட்சுமி - சகோதரி** Mobile : +33753219589
**சத்தியா - பெறாமகள்** Mobile : +41779362831




## மரண அறிவித்தல்



தோற்றம் 12 - 07 - 1993

மறைவு 09 - 04 - 2022

### வாமதேவன் சுவேதன்

யாழ். வட்டு வடக்கு கலைநகரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Bobigny ஐ வதிவிடமாகவும் கொண்ட வாம தேவன் சுவேதன் அவர்கள் கடந்த 09-04-2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - புஸ்பராஜமணி அம்மா தம்பதிகள், காலஞ்சென்ற வர்களான கந்தசாமி - கண்ணகை தம்பதிகளின் அன்புப் பேரனும், வாமதேவன் - புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மகனும், புரந்திரதேவன் - காலஞ்சென்ற சித்திராதேவி, புரோகிததேவன் - புஸ்பவதி அம்மா, பாலதேவன் - கமல மலர், காலஞ்சென்ற ஆசைநாதன் - செல்வராணி ஆகி யோரின் பாசமிகு பெறாமகனும்,சிவகுமாரன்- காலஞ் சென்ற கலைமதி, புஸ்பராசா - இராசமலர், வரதராசா - காலஞ்சென்ற கலைச்செல்வி, தங்கராசா - இன்பராணி, ஜெயராசா - மிதுலா, விமல்ராஜ் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

*தொடர்புகளுக்கு*
**புஸ்பராசா - மாமா**
**Mobile : +919626292355**
**இளஞ்சென்னி - சகோதரன்**
**Mobile : +33695518708**
**துர்க்சன் - அத்தான்**
**Mobile : +33634128255**
**புரந்திரதேவன் - பெரியப்பா**
**Mobile : +94771042553**
**பாலதேவன் - பெரியப்பா**
**Mobile : +94750523403**

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 - 02 - 1934

மறைவு 11 - 04 - 2022

### திருமதி கிறேஸ் புஷ்பம் பொன்னம்பலம் (ராசு அண்டி)

யாழ். தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும், கனடா Toronto ஐ வசிப் பிடமாகவும் கொண்ட கிறேஸ் புஷ்பம் பொன்னம்பலம் நேற்றுமுன்தினம் ( 11-04-2022 ) திங்கட்கிழமை அதிகாலையில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வீரகத்தி - பொன்னம்மா(உரிமையாளர் இரத்தினா ஸ்டோர்ஸ், கொழும்பு) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான துரையப்பா சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் (Secretary of former General Hospital Colombo and Sri Lankan national Cricket umpire) அவர்களின் அன்பு மனைவி யும்,ஜெயக்குமார்(கொழும்பு), சாந்தினி(ஜேர்மனி), யசோதினி(கனடா), பாமினி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாக்கியராணி (கொழும்பு), ஆறுமுகவடிவேல்(ஜேர்மனி), சுபாஷ் இரட்ணஜோதி(கனடா), தங்கராஜா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்றவர்களான நாகரத் தினம், முத்தம்மா, பரிமளம், சுகிர்தம், இராசமணி ஆகி யோரின் அன்புச் சகோதரியும்,நர்மதா சுதாகர்(ஜேர்மனி), காலஞ்சென்ற திவானி, திவ்யா யூரி(பெல்ஜியம்), அரவிந் டீனா(கனடா), அன்டனி(கனடா), தர்ஷான்(ஜேர்மனி), சாமுவேல்(கனடா) ஆகியோரின் அன்புப் பேத்தியும்,கஜன் இந்திரன், அகல்யா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Friday, 15 Apr 2022 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*இறுதி ஆராதனை:*
Saturday, 16 Apr 2022 9:00 AM - 11:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*நல்லடக்கம் :*
Saturday, 16 Apr 2022 11:30 AM
Beechwood Cemetery 7241 Jane St, Concord, ON L4K 1A7, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

*தொடர்புகளுக்கு*
**ஜெயக்குமார் - மகன்**
**Mobile : +94775859293**
**சாந்தினி - மகள்**
**Mobile : +4970314272345**
**யசோதினி - மகள்**
**Mobile : +14166623995**
**பாமினி - மகள்**
**Mobile : +16477410040**

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




**பகல்**
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-குர்கா,கொலைகாரன் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர் நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ
08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10



10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**சிவம் ரிவி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு